Follow us:

# தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 139 சுபகிருது வருடம், மார்கழி மாதம் 19ஆம் திகதி செவ்வாய்க்கிழமை
(03.01.2023) ஹிஜ்ரி 1444, ஜமா அதுல் ஆகிர் - 10, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.60

**கமெண்ட் கந்தர்...**

இனப்பிரச்சினைக்கு கூட தீர்வைக் கண்டிடலாம் போல... சத்தியமா இந்த தமிழ்க் கட்சிகளுக்குள்ள இருக்கிற பிரச்சினைகளுக்கு மட்டும் தீர்வுகாண ஏலாது பாருங்கோ...!







உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடத்துவது தொடர்பான அறிவிப்பு விரைவில் வருமென எதிர்பார்க் கப்பட்டாலும், நாடாளுமன்ற சட்ட ஏற்பாடுகள் ஊடாக அதனை பிற்போட அரச மேலிடத்தில் ஆலோசிக்கப்பட்டுள்ளதாம்.

நாடாளுமன்றம் கூடும்போது இது தொடர்பில் சில காய்நகர்த்தல்கள் செய்யப்படவுள்ளனவாம்.

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பதிவு விடயம்;
# பொதுச்சின்னம்-புதிய கட்சிகள் இணைவு









## ஒரு வார கால அவகாசம் வழங்கி சம்பந்தன், மாவைக்கு பங்காளிகள் கடிதம்

*நமது நிருபர்*

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பதிவுசெய்தல், புதிய கட்சிகளை இணைத்தல் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி இரா.சம்பந்தனுக்கும் மாவை சேனாதி ராஜாவுக்கும் பங்காளிக்கட்சிகளின் தலைவர்களான செல்வம் அடைக்கலநாதனும் தர்மலிங்கம் சித்தார்த்தனும் கடிதமெழுதியுள்ளனர்.

மூன்று கோரிக்கைகள் உள்ளடங்கிய அந்தக் கடிதத்தின் விபரம் வருமாறு,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பலப்படுத்துவதற்கான கோரிக்கை கொடூரமான...

02 பக்கம்

## மார்ச்சுக்கு முன் தேர்தல் அவசியம்!

### இல்லையேல் சர்வதேசத்தை நாடவுள்ளதாக ஜீ.எல். அறிவிப்பு

*கே.சுபானி*

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒத்திவைப்பதற்கு பொது வாக்கெடுப்பொன்றை நடத்தவேண்டுமென உயர்நீதிமன்ற தீர்ப்பில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

02 பக்கம்

### தேர்தல் செலவை ஒழுங்குபடுத்தல்

## சட்டமூலம் ஜனவரி 5இல் விவாதம்

எந்தவொரு தேர்தலிலும் போட்டியிடும் வேட்பாளர் தனது பிரசாரத்திற்காக செலவிடக்கூடிய அதிகபட்ச அங்கீகரிக்கப்பட்ட தொகையை தீர்மானிக்கும் உரிமை, தேர்தல் ஆணைக்குழுவிற்கு வழங்கப்படவுள்ள தேர்தல் செலவீனங்களை ஒழுங்குபடுத்தும் சட்டமூலம் ஜனவரி 5 ஆம் திகதி வியாழக்கிழமை...

02 பக்கம்



2023ஆம் புத்தாண்டில் ஜனாதிபதி அலுவலக பணியாளர்களுக்கான கடமை ஆரம்பிக்கும் நிகழ்வு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

## கடமை நேரத்தில் பேஸ்புக்கில் காலம் கடத்தும் அரச ஊழியர்கள்

### நிர்வாக செயலாளர் கவலை; கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென எச்சரிக்கை

*நா.தினுஷா*

அரச ஊழியர்கள் தமது கடமை நேரத்தில் தொலைபேசி மற்றும் பேஸ்புக் சமூக வலைத்தளத்தைப் பயன்படுத்துவது அதிகரித்துள்ளதாக தெரிவித்துள்ள அரச நிர்வாக செயலாளர் நீல் பண்டார ஹபுஹின்ன, தனியார் துறையினரைப் போன்று தொலைபேசிகளை...

02 பக்கம்

## 2023 கடினமான காலம்

### ஐ.எம்.எவ். தெரிவிப்பு

02 பக்கம்

## வளமான இலங்கைக்காக ஒன்றிணைந்து அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்!

### புத்தாண்டில், பணியைத் தொடங்கிய அனைத்து அரச ஊழியர்களுக்கும் ஜனாதிபதி அழைப்பு

07 பக்கம்

## நாடாளுமன்ற பணியாளர்கள் 35 பேர் ஓய்வு


*கே.சுபானி*

நாடாளுமன்ற அதிகாரிகள் மற்றும் சேவையாளர்கள் உட்பட 35 பேர் கடந்த 31ஆம் திகதியுடன் ஓய்வுபெற்றுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

02 பக்கம்

## தவறு செய்யும் அரசியல் அதிகாரம்

### ஜனக ரத்நாயக்க ஆவேசம்



02 பக்கம்

## குடிநீரை வீண் விரயமாக்கும் இடங்களாக பாடசாலைகள்

### நீர்வழங்கல், வடிகாலமைப்புச் சபையின் அறிக்கையில் சுட்டிக்காட்டு

*ம.சுசிகலா*

குடிநீர் வீண்விரயம் செய்யப்படும் பிரதான இடமாக பாடசாலை வளாகங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலைக்கு அடுத்தபடியாக மத ஸ்தலங்களிலுள்ள குடிநீர் குழாய்களிலிருந்து அதிகளவில் தண்ணீர் விரய மாவதுடன், அதன்பின் அரச அலுவலகங்கள் அதிகமாக நீரை விரயம் செய்வதாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின்...

02 பக்கம்

## ஓய்வுபெற்றோரை அவசியமெனின் மீண்டும் இணைக்க நடவடிக்கை

### புகையிரத திணைக்களத்துக்கு ஜனாதிபதி ரணில் பணிப்பு

புகையிரத சேவையிலுள்ள 60 வயதுக்கு மேலான ஊழியர்கள் சேவையிலிருந்து நீங்கியதையடுத்து, புகையிரத போக்குவத்து சேவையில் கடும் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், அவசியமான புகையிரத சேவை அதிகாரிகளை இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க புகையிரத அதிகாரிகளுக்கு நேற்று அறிவித்துள்ளார்.

இதுகுறித்து விளக்கமளிக்கும் வகையில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது,...

02 பக்கம்

## இலாபம், வரி கட்டாயம் செலுத்தப்பட வேண்டும்!

### இல்லாவிடின் கொடுப்பனவை இடைநிறுத்துகிறது திறைசேரி

*ம.சுசிகலா*

திறைசேரிக்கு செலுத்தவேண்டிய இலாபம் அல்லது வரிகளை செலுத்தாத அரச நிறுவனங்களின் ஊழியர்களுக்கு விடுமுறை கொடுப்பனவு வழங்குவது இடைநிறுத்தப்பட்டுள்ளது.

02 பக்கம்

## புதிய சின்னத்தில் போட்டியிடும் வாய்ப்பு

### மொட்டுக் கட்சி ஆராய்கிறது

*நா.தினுஷா*

ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டணி அமைப்பது இன்னும் கலந்துரையாடல் மட்டத்திலேயே இருக்கிறது. பேச்சுவார்த்தைகளின் பின்னரே அதுகுறித்து அறிவிக்க முடியும். ஒருவேளை எதிர்காலத்தில் ஒருசில உள்ளூராட்சி மன்றங்களில் தேர்தல் சின்னம் மாற்றமடையக் கூடும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின்...

02 பக்கம்

# தேர்தலை காலந்தாழ்த்த சட்டத்தில் இடமில்லை

## எதிர்க்கட்சி தெரிவிப்பு

தேர்தலை காலந்தாழ்த்துவதற்கு சட்டத்தில் இடமில்லை. தேர்தலை நடத்த முடியாத அரசாங்கமொன்று நாட்டுக்கு அவசியமும் இல்லை. எனவே, தேர்தலை உரிய நேரத்தில் நடத்த முடியாவிட்டால் இந்த அரசாங்கம் முழுமையாக பதவி விலக வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியல்ல தெரிவித்தார்.

மேலும், முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை மின்சாரக் கதிரைக்கு அனுப்ப முயற்சிப்பதாக குற்றச்சாட்டு முன்வைத்தார்கள். ஆனால், இந்த அரசாங்கம் ஒட்டுமொத்த மக்களையும் மின்சாரக் கதிரைக்கு அனுப்ப முயற்சிப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

புது வருடத்தில் கட்சி நடவடிக்கைகளை நேற்று (02) ஆரம்பித்ததன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

நாங்கள் இம்முறை நிச்சயமாக அரசாங்கமொன்றை அமைப்போம். தேர்தலை வெற்றிகொள்வது தொடர்பில் எந்த சந்தேகமும் கொள்ளவேண்டிய அவசியமில்லை. தற்போதுள்ள அரசாங்கம் இருக்குமிடம் தெரியாமல் போகும். தேர்தலில் போட்டியிடுவதற்கு வேட்பாளர்களும் இல்லாத நிலைமையே நிலவுகிறது. நான் பிரதிநிதித்துவப்படுத்தும் மாகாணத்தில் வேட்பாளர்களை தேடிக்கண்டுப்பிடிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

தேர்தலை காலந்தாழ்த்துவதற்கு சட்டத்தில் இடமில்லை. எனவே, கட்டாயம் தேர்தலை நடத்த வேண்டும். இதற்கு முன்னர் இருந்த ஜனாதிபதிகளும் தேர்தலை காலந்தாழ்த்துவதற்கான முயற்சிகளை எடுத்திருந்தார்கள். ஆனால், இறுதியில் நீதிமன்றமே தேர்தலை நடத்துமாறு பணித்தது. வாக்களிக்கும் உரிமை என்பது, அடிப்படை மனித உரிமையாகும். எனவே, தேர்தலை நடத்த முடியாவிட்டால் அரசாங்கம் முழுமையாக பதவி விலகவேண்டும். தேர்தலைக் கூட நடத்த முடியாத அரசாங்கம் எமக்கு அவசியமில்லை.

மக்களே இந்த அரசாங்கத்துக்கு வாக்களித்தார்கள். அதற்கான பிரதிபலனையே தற்போது அனுபவிக்கிறார்கள். எங்களின் ஆட்சிகாலத்தில் மக்கள் மகிழ்ச்சியாக இருந்தார்கள். அனைத்து நிவாரணங்களையும் பெற்றுக்கொண்டு இறுதியில் எங்களுக்கு எதிராக வாக்களித்தார்கள்.

அமைச்சர் காஞ்சன விஜயசேகர, மின்சார சட்டத்தை வாசிக்கவில்லை என்று கருதுகிறேன். சட்டத்தின் பிரகாரம் மின் கட்டணத்தை அதிகரிக்கும் அதிகாரம் அமைச்சருக்கு இல்லை. அமைச்சர் அரசாங்கத்தின் கொள்கைகளை மாத்திரமே தயாரிக்க வேண்டும். கட்டண அதிகரிப்பை மேற்கொள்வதற்கான அதிகாரம் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கே இருக்கிறது. அதனையும் மீறி கட்டணத்தை அதிகரித்தால் நிச்சயமாக நாங்கள் நீதிமன்ற நடவடிக்கைகளுக்குச் செல்வோம்.

மின் கட்டணத்தை அதிகரிக்க அமைச்சரவை அனுமதி வழங்குமாக இருந்தால் அது தற்கொலைக்கு சமமான விடயமாகவே அமையும். கடந்த காலங்களில் மஹிந்த ராஜபக்ஷவை மின்சாரக் கதிரைக்கு அனுப்ப முயற்சிப்பதாக குறிப்பிட்டார்கள். ஆனால், இந்த அரசாங்கம் நாட்டிலுள்ள ஒட்டுமொத்த மக்களையும் மின்சாரக் கதிரைக்கு அனுப்பவே முயற்சிக்கிறது என்றார்.

# இன்று முதல் 2 மணிநேர மின்வெட்டு

இன்று (03) முதல் எதிர்வரும் 6ஆம் திகதிவரை 2 மணித்தியாலம் 20 நிமிட மின்துண்டிப்பை அமுல்படுத்துவதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளதாக பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக நேற்று (02) தெரிவித்தார்.

இதன்படி ஏ முதல் டபிள்யூ வரையான 20 வலயங்களில் பகல்வேளையில் ஒரு மணித்தியாலயமும் இரவு வேளையில் ஒரு மணித்தியாலமும் 20 நிமிடமும் மின்வெட்டை அமுல்படுத்த அனுமதியளிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

## புதிய சின்னத்தில்...

பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

அந்தக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று (02) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் ஒருசில தினங்களில் உள்ளூராட்சிமன்ற தேர்தலை நடத்துவதற்கான வர்த்தமானி வெளியிடப்படும் என்று தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது. இதுதொடர்பில், எங்களுடன் கூட்டணி அமைத்துள்ள ஏனைய கட்சிகளுடன் கலந்துரையாடியிருந்தோம். அதற்கமைய, வெற்றிகரமான கூட்டணியினூடாக மொட்டுச் சின்னத்தில் அதற்கு முன்னர் போன்று இம்முறையும் உள்ளூராட்சிமன்ற தேர்தலில் பொதுஜன பெரமுனவின் கீழ் போட்டியிட தீர்மானித்துள்ளோம்.

தற்போதுவரையில் பொது பொதுஜன பெரமுனவின் சின்னத்திலேயே போட்டியிட தீர்மானித்துள்ளோம். கூட்டணியாக போட்டியிடுவது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியுடனும் கலந்துரையாடியிருந்தோம். ஒருவேளை, ஒருசில உள்ளூராட்சிமன்றங்களில் பொதுஜன பெரமுனவின் சின்னத்தில் போட்டியிடவும், இன்னும் சில உள்ளூராட்சி மன்றங்களில் வேறு கட்சிகளின் சின்னங்களில் எங்களின் வேட்பாளர்களை நியமித்து போட்டியிட வேண்டிய நிலை ஏற்படக்கூடும். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பொதுஜன பெரமுனவின் சின்னத்தின் கீழ் போட்டியிடவே தீர்மானித்துள்ளோம்.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டணி அமைப்பது தொடர்பில் இதுவரையில் நேரடி தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை. கலந்துரையாடியதன் பின்னரே ஐக்கிய தேசியக் கட்சியுடனான கூட்டணி தொடர்பில் அறிவிக்க முடியும்.

# இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு தப்பி தமிழ்நாட்டில் ஊடுருவலா?

## கஞ்சிப்பானை இம்ரானை உடனடியாக கைதுசெய்ய பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்து

(திருச்சி எம்.கே.ஷாகுல் ஹமீது)

போதைமருந்து கடத்தல் கும்பல் தலைவன் கஞ்சிப்பானை இம்ரான் தமிழ்நாட்டில் ஊடுருவியிருப்பதாக வெளியாகியுள்ள செய்திகள் பெரும் அதிர்ச்சியளிக்கின்றன. அவரை உடனடியாக கைதுசெய்து நாடு கடத்த வேண்டும் - என பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார். இதுகுறித்து பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் கூறியதாவது,

உலகின் மிகக்கொடிய போதைமருந்து கடத்தல் கும்பல் தலைவனான முகமது இம்ரான் தமது கூட்டாளிகளுடன் இலங்கையிலிருந்து தமிழ் நாட்டுக்கு ஊடுருவியிருப்பதாக வெளியாகியுள்ள செய்திகள் பெரும் அதிர்ச்சியளிக்கின்றன. எல்லையோர பாதுகாப்புக் குறைபாடுகளையே இது காட்டுகிறது.

இம்ரான் இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு தப்பிவரக்கூடும் என்று தமிழக உளவுத்துறைக்கு மத்திய உளவு அமைப்புகள் எச்சரிக்கை விடுத்திருந்ததாகக் கூறப்படுகிறது. அதற்குப் பிறகும் கடலோரக் காவல்படை, தமிழக பொலிஸ்துறையின் பாதுகாப்பை மீறி இம்ரான் தமிழகத்தில் நுழைந்தது எப்படி?

பாகிஸ்தான், ஆப்கானிஸ்தானில் செயற்பட்டுவரும் ஹெரோயின், கொக்கெய்ன் கடத்தல் கும்பல்களுடன் முகமது இம்ரானுக்கு வலிமையான பிணைப்பு உண்டு. 2019ஆம் ஆண்டில் டுபாயில் கைதுசெய்யப்பட்டு இலங்கைக்கு நாடு கடத்தப்பட்ட இம்ரான், அங்கு பிணையில் விடுதலையான நிலையில் தப்பியுள்ளார். தமிழ்நாட்டில் போதைமருந்து கலாசாரம் பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.

போதைப்பொருள் கடத்தல் அதிகரித்துள்ளது. இத்தகைய சூழலில் இம்ரானின் ஊடுருவல் நிலைமையை மேலும் மோசமாக்கக்கூடும். இம்ரானை உடனடியாக கைதுசெய்து நாடு கடத்த வேண்டும் - என்று அவர் கூறினார்.

## ஓய்வுபெற்றோரை...

புகையிரத நிலைய பொறுப்பதிகாரிகள் சங்கத்தின் தலைவர் சுமேல் சோமரத்ன கீழ்காண்டவாறு தெரிவித்தார்.

60 வயதுக்கும் அதிகமான அரச ஊழியர்கள் அனைவரும் ஓய்வுப் பெற்றுச் செல்லவேண்டுமென்ற அரசாங்கத்தின் கொள்கையின் காரணமாக, புகையிரத திணைக்களம் கடுமையான எச்சரிக்கை நிலையை சந்தித்துள்ளது. இன்று (நேற்று) காலை வரையில் 8 அலுவலக புகையிரத சேவைகள் இரத்து செய்யப்பட்டிருந்தன. பொதுவாகவே புகையிரத போக்குவரத்துச் சேவை பற்றாக்குறையாக இருக்கும் நிலையில் இவ்வாறான புகையிரத சேவை இரத்தாகுவது மேலும் அதிகரிக்கக் கூடும்.

புகையிரத நிலையங்களிலுள்ள பணியாளர்களுக்கான பற்றாக்குறையினால் சேவைகளை முறையாக வழங்க முடியாத நிலையும் நிலவுகிறது. இதற்கு உடனடித் தீர்வை பெற்றுக்கொடுக்குமாறு தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறோம். 2013ஆம் ஆண்டின் பின்னர் புகையிரத நிலைய பொறுப்பதிகாரிகளுக்கு பதவி அனுமதி வழங்காமையின் காரணமாக, நடமாடும் பிரயாணச்சீட்டு விநியோகப் பிரிவுகளை மூடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அதேபோன்று, இதன் காரணமாக மாத்தறை முதல் பெலியத்த வரையிலும், தலைமன்னார் முதல் மதவாச்சி வரையிலான புகையிரத நிலையங்களை மூடுவதற்கும் நடவடிக்கை எடுக்க நேரிடும். இது தொடர்பில் தீர்வை பெற்றுக்கொடுக்குமாறு தொடர்ச்சியாக கோரி வருகிறோம். ஆனால், இதுவரையில் தீர்வு கிடைக்கவில்லை. அமைச்சர் இந்த பிரச்சினையில் தலையிட்டு தீர்வை பெற்றுக்கொடுப்பார் என்று எதிர்பார்க்கிறோம். இந்த நிலைமை நீடிக்குமாக இருந்தால் விருப்பமில்லாவிட்டாலும் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுக்க நேரிடும்.

புகையிரத நிலைய பணியாளர்கள், புகையிரத பழுதுபார்ப்பு நடவடிக்கைகள் என்பனவும் நெருக்கடிக்குள்ளாகியுள்ளன. தற்போதைய நிலைமையில் புகையிரத திணைக்களத்துக்கு மேலதிகமாக புதிய ஊழியர்களை இணைத்துக்கொள்வதாயின் அவர்களுக்கு பயிற்சிகளை வழங்கி முறையாக இணைத்துக்கொள்ள வேண்டும். அதன் பின்னர் அவர்களில் இருந்து, தெரிவுசெய்து புகையிரத பணிகளுக்கு இணைத்துக்கொள்ள வேண்டும். பயற்சி அனுபவத்தின் அடிப்படையிலேயே அவர்களுக்கான பதவி உயர்வுகளையும் வழங்க முடியும். இந்த செயற்பாடுகளை நேரடியாக முன்னெடுக்க முடியாது. ஒப்பந்த அடிப்படையில் ஊழியர்களை இணைத்துக்கொள்வதை ஏற்றுக்கொள்ள முடியாது. எனவே, இந்த பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும்வரை குறுகிய காலத்துக்காவது முக்கிய பிரிவினருக்கு சேவைகால அதிகரிப்பை வழங்க வேண்டும் என்றார்.

## நாடாளுமன்ற...

இவ்வாறு ஓய்வுபெற்றுள்ளோரில் துறைசார் தலைவர்கள் பலர் உள்ளதாக நாடாளுமன்ற செய்திகள் தெரிவித்தன.

அரச சேவையாளர்களின் ஓய்வுபெறும் வயதெல்லையை 60ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதன்படியே நாடாளுமன்றத்திலிருந்து மேற்படி குழுவினர் ஓய்வு பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த அதிகாரிகள் மற்றும் சேவையாளர்கள் கடந்த காலங்களில் தமது சேவை காலத்தை நீடிப்பது தொடர்பில் நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தபோதும் அவை தோல்வியடைந்துள்ளன. இதுகுறித்து நிதி இராஜங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய கருத்து தெரிவிக்கையில்,

நாடாளுமன்றம் விசேட முறையில் இதனை கையாளுமாயின் அரச சேவையில் பாரிய குழப்பங்கள் ஏற்படும். இவ்வாறு நாடாளுமன்ற அதிகாரிகள் மற்றும் சேவையாளர்களுக்கு மட்டும் விசேட சேவை கால நீடிப்பை பெற்றுகொடுக்கக்கூடாது எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, 60 வயது பூர்த்திசெய்த மேலும் பல நாடாளுமன்ற சேவையாளர்கள் இவ்வாண்டு ஓய்வு பெறவுள்ளதாக நாடாளுமன்ற அதிகாரியொருவர் தெரிவித்தார்.

## இலாபம், வரி ...

அனைத்து அரச நிறுவனங்களின் ஊழியர்களுக்கும் விடுமுறை கொடுப்பனவுகளை வழங்குவது தொடர்பில் திறைசேரியின் செயலாளர் கே.மஹிந்த சிறிவர்தன அனைத்து அரச நிறுவனங்களின் தலைவர்களுக்கும் சுற்றறிக்கை மூலம் அறிவித்தல் விடுத்துள்ளார்.

அரச ஊழியர்களுக்கான விடுமுறை கணக்கீடு, கடைகள் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் சட்ட விதிகளின்படி இருக்கவேண்டும் என்றும் திறைசேரியின் செயலர் குறிப்பிட்டுள்ளார்.

## கடமை நேரத்தில்...

அலுவலகத்தின் வெளியிலுள்ள பாதுகாப்பு பெட்டகத்திலேயே வைத்துவருவதற்கு நடவடிக்கை எடுக்க வைத்துவிட வேண்டாம் என்று எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அரச நிர்வாக அலுவலகத்தில் நேற்று (02) இடம்பெற்ற புதுவருடத்தில் கடமைகளை ஆரம்பிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நேரத்துடன் தொழிலுக்கு வருவதும், காலையும் மாலையும் கையொப்பமிடுவதும், சம்பளம் பெறுவதும் மாத்திரமே பிரதான கடமை என்று சிலர் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். இதற்கு மேலதிகமாக அரச சேவையிலுள்ள அனைத்தையும் அவர்களே தீர்மானிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருக்கிறார்கள். மற்றையவர்களை கடமையாற்ற விடாதவர்கள் சிலரும் இருக்கிறார்கள்.

அரச நிர்வாகத்துக்கு மக்களை அழைக்காமல் பணியாற்ற முடியுமானதாக இருக்க வேண்டும். அதாவது, கடிதமொன்றை அனுப்பியதும் அதற்கு பதிலளிக்க கூடியவகையில் நிர்வாகம் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பாகும். ஒவ்வொரு நாளும் வரும் வேலைகளை உடனுக்குடன் செய்து முடித்துவிட்டால் இவ்வாறு வேலைப்பளு அதிகரிக்காது. மக்கள் சேவை நிமித்தம் காரியாலயங்களுக்கு வரவேண்டிய அவசியம் இருக்காது. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் தொலைபேசி அழைப்பொன்றை வழங்கி சம்பந்தப்பட்ட ஆவணங்களை வட்சப் கணக்குக்கு அனுப்பி வைத்தாலே வேலைகள் இலகுவாக நிறைவடைந்துவிடும்.

விசேடமாக, தங்களின் தொலைபேசிகளாக இருந்தாலும் காலையில் கடமை ஆரம்பித்தது முதல் முகநூல் பார்வையிடுவதையே முன்னெடுக்கிறார்கள். முகநூல் பார்க்க வேண்டாம் என்று கூறவில்லை. கடமை நேரத்தில் அதனை தவிர்த்துக்கொள்ள வேண்டியது அவசியமாகும். முழு நாளும் தொலைபேசியில் இணைந்திருப்பதை தவிர்த்துக்கொள்ள வேண்டும். நான் விஜயம் மேற்கொண்ட பெரும்பாலான இடங்களில் அதிகாரிகள் தொலைபேசி அழைப்பெடுப்பதையும், முகநூல் பார்ப்பதையும் அவதானித்துள்ளேன். அதனால், தனியார் துறை ஊழியர்களை போன்று அலுவலகத்துக்கு வரும்போதே கைபேசிகளை பாதுகாப்பு பெட்டகத்தில் வைத்து விட்டு, வீடு செல்லும்போது எடுத்துச்செல்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டி ஏற்படும். எனவே, அவ்வாறான தீர்மானமொன்றை எடுக்க இடமளிக்காமல் செயற்பட வேண்டும் என்பதே எனது கோரிக்கையாகும் என்றார்.

## தேர்தல் செலவை...

நாடாளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளதாக நாடாளுமன்ற ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவினால் கடந்த மாதம் சபையில் சமர்ப்பிக்கப்பட்ட சட்டமூலத்தில் ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல், உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மற்றும் மாகாண சபைத் தேர்தல் ஆகியவற்றுக்கு அரசியல் கட்சிகள் ரீதியாக ஆலோசனை வழங்கியதன் பின்னர் தேர்தல் ஆணைக்குழுவுக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்ட தொகையை தீர்மானிக்கும் ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ளன.

எந்தவொரு தேர்தலிலும் போட்டியிடும் வேட்பாளர், சட்டத்தின் கீழ் தனது பிரசாரத்திற்காக வெளிநாட்டு அரசாங்கங்கள் மற்றும் உள்ளூர் பதிவு செய்யப்பட்ட தனியார் நிறுவனங்களிடமிருந்து நிதி அல்லது வேறு எந்த உதவியையும் பெறுவது தடுக்கப்படுகிறது.

சில வருடங்களுக்கு முன்னர் தற்போதைய பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையிலான தேர்தல் சீர்திருத்தங்களுக்கான தெரிவுக்குழுவினால் இச்சட்டம் முதலில் முன்மொழியப்பட்டது.

## குடிநீரை வீண்...

மேலதிக பொது முகாமையாளர் ஏக்கநாயக்க வீரசிங்க தெரிவித்தார்.

பாடசாலைகள் மற்றும் வழிபாட்டுத் தலங்களுக்கு இலவசமாக குடிநீர் விநியோகம் செய்யப்படுவதாலேயே நீரை அதிகமாக வீண்விரயம் செய்வதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தண்ணீர் வீணாவதால் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு ஆண்டுதோறும் ஒரு கோடி ரூபாவுக்கு மேல் நஷ்டம் ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, மத ஸ்தலங்களுக்கான நீர் விநியோகத்திற்காக குறிப்பிட்ட தொகையை அறவிடுவது தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளதாக நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

இதனிடையே குடிநீர்க் குழாய் உடைப்பு, தண்ணீர்க் கசிவு போன்ற காரணங்களால் கணிசமான அளவு குடிநீர் வீணாவதாகவும் அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## மார்ச்சுக்கு முன்...

எனவே, எதிர்வரும் மார்ச் 20ஆம் திகதிக்கு முன்னர் கட்டாயமாக தேர்தலை நடத்தி முடிக்கவேண்டும் என முன்னாள் அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீ.எல்.பீரிஸ் நேற்று (02) தெரிவித்தார்.

இது குறித்து அவர் ஊடகங்களுக்கு மேலும் தெரிவிக்கையில்,

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் தொடர்பில் உயர்நீதிமன்றத்தில் பல தீர்ப்புகள் உள்ளன. நீதிக்குட்பட்டு எதிர்வரும் மார்ச் 20ஆம் திகதிக்கு முன்னர் நாடு முழுவதும் 340 உள்ளூராட்சி மன்றங்களை நிறுவுவதற்கு கட்டாயமாக பெப்ரவரி மாத இறுதியிலோ அல்லது மார்ச் மாத தொடக்கத்திலோ தேர்தலை நடத்த வேண்டும்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போடுவது தொடர்பிலான தீர்மானம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டால் அதற்கு கட்டுப்படவேண்டும் என தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது. அது தவறு. நாட்டின் இறையாண்மை நாடாளுமன்றத்திடமில்லை. அது மக்களிடமே உள்ளதால் நாடாளுன்ற தீர்மானத்தின்படி தேர்தலை ஒத்தி வைக்க முடியாது.

தேர்தலை நடத்துவதற்கு பணமில்லை என அரசு கூறும் அபத்தமான பேச்சுக்கு இடம்கொடுக்கப்படுமாயின் அது நாட்டின் ஜனநாயக அழிவு. அரச செலவினமான ரூ.7ஆயிரத்து 600 பில்லியனிலிருந்து 10 பில்லியன் ரூபாவை செலவளிப்பது பாரிய பிரச்சினையாகவுள்ளது. நாளுக்கு நாள் எவ்வித தயக்கமுமின்றி கோடிக்கணக்கான ரூபா பணம் அச்சிடப்பட்டு செலவு செய்யப்பட்டு வரும் நிலையில், ஜனாதிபதியும் தேர்தலை நடத்துவதற்கு பணமில்லை எனக் கூறுவாராயின் மக்களின் விருப்பமின்றி தொடர்ந்தும் அவர் ஆட்சியிலிருப்பார்.

அரசு உள்ளூராட்சி மன்றத் தேர்தலை காலம் தாழ்த்துமாயின் அடுத்த கட்டமாக ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்காக சர்வதேச ரீதியில் அழுத்தத்தை பிரயோகிக்கும் வகையில் எமது செயற்பாடுகள் அமையும் என்றார்.

## தவறு செய்யும்...

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் சுதந்திரத்தை சிதைக்கும் வகையில் அரசியல் அதிகாரம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும், இது வரலாற்றுத் தவறு எனவும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க நேற்று (02) தெரிவித்தார்.

நாட்டிற்கு சுதந்திரமான நிறுவனங்கள் தேவைப்படுகின்ற இவ்வேளையில், தற்போதுள்ள சுயாதீன நிறுவனங்களில் செல்வாக்கு செலுத்துவது நல்ல நிலைமையல்ல என்றார்.

மின் கட்டணத்தை உயர்த்தும் முறை குறித்து சட்டமா அதிபரிடம் தவறான விளக்கத்தை பெற்றதாகவும், அதற்கேற்ப மின் கட்டணத்தை அதிகரிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் மேலும் குறிப்பிட்டார்.

அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பதற்கான பிரேரணை மிகவும் அநீதியானது எனவும், பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அதற்கு எதிரானது எனவும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க மேலும் தெரிவித்தார்.

## தமிழ்த் தேசிய கூட்டமைப்பு...

யுத்தத்துக்கு முகம் கொடுத்து 13 வருடங்கள் கடந்த பின்னரும் ஒரு பலவீனமான அரசியல் சூழ்நிலையை எமது இனம் முகம் கொடுத்து நிற்கிறது. மிகப் பலமான கட்டமைப்பாக திகழ்ந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பல்வேறு காரணங்களால் சிதைவடைந்து தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கும் நிலையை எட்டியுள்ளதை நாங்கள் கவலையுடன் அவதானிக்கிறோம்.

தமிழ்த் தேசியப் பரப்பில் அரசியல் ரீதியாக செயலாற்றும் தரப்பினருடன் ஒருமித்த நிலைப்பாட்டில் செயற்பட்டு ஒரு பலமான அரசியல் சக்தியாக திகழ வேண்டும் என்ற நோக்கோடு கடந்த காலங்களில் நாம் எடுத்து வந்த முயற்சிகள் மக்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பையும் நம்பிக்கையும் ஊட்டி உள்ளன.

உதாரணமாக ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமை பேரவைக்கு நாங்கள் அனுப்பி வைத்த கடிதங்கள், பிராந்திய வல்லரசான இந்தியாவை நோக்கி நாம் எழுதிய கடிதம், அதற்குப் பின்னரும் மக்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகளுக்காக ஒருமித்த நிலையில் நாம் செயலாற்றி வந்தமை, ஜனாதிபதித் தேர்தலிலே ஒருமித்த கோரிக்கையை அனைத்து வேட்பாளர்களிடமும் முன்வைத்தமை, அண்மையில் சர்வகட்சி கூட்டத்திற்கு ஜனாதிபதி விடுத்த அழைப்பின் பின்னர் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்று கூடி பல விடயங்களை ஆராய்ந்து ஒருமித்த குரலில் அரச தரப்பிடம் கோரிக்கைகளை முன்வைத்தமை எனப் பலவற்றைச் சுட்டிக்காட்ட முடியும்.

இந்த நடவடிக்கைகளின் தொடர்ச்சியானது மீண்டும் தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள அனைத்து தரப்பினரையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் உள்வாங்கி அது ஒரு பலமான கட்டமைப்பாக தமிழ் மக்களின் அன்றாட மற்றும் அரசியல் விடயங்களைக் கையாளும் அரசியல் இயக்கமாக மாற்றமடையும் என்ற எதிர்பார்ப்பு எம்மிடமும் தமிழ் மக்களிடமும் மேலோங்கி இருக்கிறது.

இருப்பினும், அண்மையில் வவுனியாவில் நடந்த தமிழரசுக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் அறிவிக்கப்பட்ட முடிவுகளும் அதேபோன்று கிளிநொச்சியில் வேட்பாளர்களை தெரிவு செய்வதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள விளம்பரமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருக்கக்கூடிய ஒற்றுமையை குழப்புவதான சந்தேகத்தை எமது கட்சிகள் மத்தியிலும் தமிழ் மக்கள் மத்தியிலும் ஏற்படுத்தியுள்ளது. தமிழரசுக் கட்சி முக்கியஸ்தர்களின் மாறுபட்ட அறிக்கைகள் மேலும் அவற்றை உறுதி செய்திருக்கின்றன. தேர்தல் நலன்களை மாத்திரம் கருத்தில் கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்படவில்லை என்பதை தாங்கள் நன்கு அறிவீர்கள்.

அனைத்து தமிழ்த் தேசியத் தரப்பினரையும் உள்வாங்கி ஒரு பலமான அரசியல் கட்டமைப்பை உருவாக்குவது தற்போதைய காலத்தின் தேவை என்பதை நாங்கள் நன்கு உணர்கிறோம். அதுவே எம் மக்களது பாரிய எதிர்பார்ப்பும் நம்பிக்கையும் என்பதையும் நாங்கள் தெளிவாக அறிந்துள்ளோம். இந்தக் கட்டமைப்பு தொடர்ச்சியாக தமிழ் மக்களுடைய அரசியல் அபிலாஷைகளை முன்னெடுப்பதற்கும் வலுவான பலமான இயக்கமாக தொடர்வதற்கும், நன்கு ஆய்வு செய்து, நாங்கள் பின்வரும் ஆலோசனைகளை, நாம் ஒன்றிணைந்து, உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையைத் தங்கள் முன் வைக்கிறோம்.

1. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் தமிழ்த் தேசியப் பரப்பில் அரசியல் ரீதியாக செயற்படும் அனைத்து தரப்பினரும் உள்வாங்கப்பட வேண்டும்.

2. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலுவாக நிர்வாக மற்றும் ஸ்தாபன ரீதியாக வரையறுக்கப்பட்டு கட்டியமைக்கப்படல் வேண்டும்.

3. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனக்கெனும் பொதுச் சின்னத்துடன் உத்தியோகபூர்வமாகப் பதியப்பட வேண்டும்.

மேற்குறிப்பிட்ட விடயங்கள் நடைமுறைப் படுத்தப்படும் பட்சத்தில், அங்கத்துவக் கட்சிகளின் தனித்துவம் பேணப்படுவதோடு தனி ஒரு கட்சியின் ஆதிக்கப் போக்குகளும் நெருக்கடிகளும் தவிர்க்கப்பட்டு சுயாதீனமான நிரந்தரமான ஒரு அரசியல் கட்டமைப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாகும். இந்த விடயம் இன்று நேற்று அல்லாமல் நீண்டகாலக் கோரிக்கையாக தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள அனைவராலும் மக்களாலும் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகிறது.

இக்கோரிக்கையை எதிர்கால எமது இன நலன் கருதி நீங்களும் ஏற்றுக் கொள்வீர்கள் என்பது எங்களுடைய திடமான நம்பிக்கை.

ஆகவே, காலத்தின் அவசியத்தைக் கருதி தேர்தல் நலன்கள் கட்சி நலன்களைத் தாண்டி எமது மேற்கூறிய கோரிக்கைகளை ஒன்றிணைந்து நடைமுறைப்படுத்த தங்களுடைய ஆக்கபூர்வமான பதிலை, அதிக காலம் தாழ்த்தாது, ஒரு வார காலத்துக்குள் வழங்குமாறு அன்புடன் கோரி நிற்கிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 2023 கடினமான...

2023ஆம் ஆண்டு உலக பொருளாதாரத்திற்கு கடினமான காலம் என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது. அந்த அமைப்பின் நிர்வாக பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவா இந்த விடயத்தைக் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் கூறியிருப்பதாவது, 2023 ஆம் ஆண்டு சர்வதேச பொருளாதாரத்துக்கு கடினமான காலம்தான். அமெரிக்கா, சீனா மற்றும் ஐரோப்பிய நாடுகள் பலவற்றின் பொருளாதார செயற்பாடுகள் நலிவடைந்து வருவது காரணமாகும்.

சீனாவில் பயணத் தளர்வுகள் செயற்பாட்டுக்கு வந்த பின்னர் தொற்று பரவலைத் தடுக்க முடியாது. சீனாவுக்கு அடுத்த இரண்டு மாதங்கள் மிகவும் கடினமான காலம். சீனப் பொருளாதார வளர்ச்சியில் எதிர்மறை தாக்கங்கள் ஏற்படலாம். அந்த எதிர்மறை விளைவுகள் சர்வதேச பொருளாதாரத்திலும் எதிரொலிக்கலாம்.

ஆனால், உலகின் மூன்றாவது பெரிய பொருளாதாரமான அமெரிக்கப் பொருளாதாரம் நெருக்கடியையோ அல்லது மந்தநிலையையோ தவிர்க்கும் சூழலே இருக்கிறது. அதற்குக் காரணம் அங்கு தொழிலாளர் சக்தி, வலுவாக உள்ளது என்றார்.

# ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, விமல், டலஸ் அணிகள் தேர்தல் கூட்டணி

## பேச்சுவார்த்தை இறுதிக்கட்டத்தில்

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, பொதுஜன பெரமுனவிலிருந்து பிரிந்த டலஸ் அணியினர், மற்றும் விமல் வீரவங்ச தலைமையிலான மேலவை இலங்கை கூட்டமைப்பு ஆகியன இணைந்து உருவாக்கியுள்ள புதிய கூட்டணியை இறுதிசெய்வதற்கான பேச்சு இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

புதிய கூட்டணி ஒரு தலைவரின் கீழ் அமையாது, தலைமைத்துவ சபையின் கீழ் அமையும் என அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, புதிய கூட்டணிக்கு சுதந்திர மக்கள் கூட்டமைப்பு என பெயரிடவும் முன்மொழியப்பட்டுள்ளதாக அந்த வட்டாரங்களிலிருந்து தெரிவிக்கப்படுகிறது.

மூன்று பிரதான குழுக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் மூன்று தலைவர்கள் அடங்கிய குழுவின் கீழ் புதிதாக உருவாக்கப்பட்ட சுதந்திர மக்கள் கூட்டமைப்பை நிறுவுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

எவ்வாறாயினும், இதுவரை இறுதித் தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை என கூட்டணி அமைப்பதில் முக்கிய பங்காற்றிய அரசியல் கட்சித் தலைவர் ஒருவர் தெரிவித்துள்ளார்

இதேவேளை, புதிய கூட்டணியின் நிறைவேற்று சபையில் நாற்பது வீதத்தை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும், மற்றைய இரண்டு தரப்பிற்கும் தலா முப்பது வீதம் ஒதுக்குவதற்கு முன்மொழியப்பட்டுள்ளதாக அறியமுடிகிறது.

புதிய கூட்டணியை அமைப்பதற்கு தேவையான அடிப்படைப் பணிகள் தற்போது முடிவடைந்துள்ளதாகவும், இந்த வார இறுதியில் தனது பணிகளை முடிக்க முடியும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரியவருகிறது.

# வவுனியாவில் அரச ஊழியர்கள்

## சத்தியப்பிரமாணம் செய்து கடமைகளை ஏற்பு




(வவுனியா நிருபர் திவியா)

வவுனியாவில் அரச உத்தியோகத்தர்கள் சத்தியப்பிரமாணம் செய்து 2023ஆம் ஆண்டுக்கான தமது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டனர்.

அந்தவகையில் வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று (02) காலை 9 மணிக்கு மாவட்ட அரச அதிபர் பி.ஏ.சரத்சந்திரவால் தேசியக் கொடி ஏற்றப்பட்டதுடன், இராணுவ வீரர்கள் மற்றும் நாட்டுக்காக உயிர்நீத்தவர்களை நினைவுகூர்ந்து இரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து புதுவருட சத்தியப் பிரமாணத்தை அரச அதிகாரிகள், அரச உத்தியோகத்தர்கள் செய்துகொண்டனர். தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழிகளில் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டதுடன், புதுவருட வாழ்த்துகளைப் பரிமாறி தமது கடமைகளை பொறுப்பேற்றனர்.

இந்நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர், அரச அதிகாரிகள், இராணுவத் தளபதி, கடற்படைத் தளபதி, அரச உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## 2500 குடும்பங்களை இலக்காகக்கொண்ட

# சமூக சமையலறை செயற்றிட்டம் ஆரம்பம்







இதன் மூலம் பயன்பெறும் குடும்பங்களிலுள்ள நபர்களை இலக்காகக்கொண்டு சுயதொழில் வாய்ப்புகளை உருவாக்குதல், தொழில்சார் பயிற்சி வழங்குதல், சமூக மேம்பாடு உள்ளிட்ட நலத்திட்டங்கள் மூலம் இக்குடும்பங்களின் பொருளாதார நிலையை மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அலுவலகத்தின் தலைமையில் முப்படையினர், பொலிஸார், சிவில் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் பல்வேறு அரச நிறுவனங்கள், சர்வதேச லயன்ஸ் கிளப், ரோட்டரி கிளப் உள்ளிட்ட பல தனியார் நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் கங்காராம விகாரையில் இந்த சமூக சமையலறைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

வரலாற்றுச் சிறப்புமிக்க ஹுனுப்பிட்டி கங்காராம விகாரையை மையமாகக்கொண்ட சமூக சமையலறை திட்டம் நேற்றுமுன்தினம் (01) ஆரம்பமானது. தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க இந்தத் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

கொம்பனித்தெரு பொலிஸ் எல்லைக்குட்பட்ட ஹுனுபிட்டிய, கொம்பனித்தெரு, காலிமுகத்திடல், இப்பன்வல, வேகந்த ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்குள் உணவு கிடைப்பதில் சிரமம் உள்ள 2,500 குடும்பங்களை இலக்காகக்கொண்டு இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இந்த சமூக சமையலறைத் திட்டம் ஜனவரி 01 முதல் 40 நாட்களுக்கு தினந்தோறும் செயல்படுத்தப்படும். அந்த காலகட்டத்தில்

ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜேவர்தன, முன்னாள் அமைச்சர் தயா கமகே, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் (ஓய்வு பெற்ற) கமல் குணரத்ன, பாதுகாப்புப் படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா, முப்படைகளின் தளபதிகள், பொலிஸ் மா அதிபர், சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம், ஜனாதிபதியின் இணைப்புச் செயலாளர் ராஜித அபேகுணசேகர, ஜனாதிபதி ஊடகப் பணிப்பாளர் டபிள்யூ.எம்.கே.விஜய பண்டார உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# சட்டவிரோதமாக அரச காணிகளை தனியார் கையகப்படுத்துவதைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்!

## மட்டு. மண்முனை வடக்கு பகுதியில் முன்னெடுப்பு




(கல்லடி நிருபர்)

மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட சவுக்கடி பகுதியில் சட்டவிரோதமாக அரச காணிகளை தனிநபர்கள் கையகப்படுத்துவதை கண்டித்து ஆர்ப்பாட்டமொன்று நேற்று (02) முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு காந்தி பூங்கா முன்பாக ஆரம்பமான ஆர்ப்பாட்டமானது, அங்கிருந்து மண்முனை வடக்கு பிரதேச செயலகம் வரை பல்வேறு கோஷங்களை எழுப்பியவாறு சென்று, காணி அபகரிப்பு தொடர்பாக பிரதேச செயலாளரிடம் கோரிக்கை அடங்கிய மகஜரைக் கையளித்தனர்.

இதன்போது காணி அபகரிப்புக்கு எதிராக உரிய தீர்வை தற்போதே வழங்க வேண்டும் எனக் கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள், பிரதேச செயலாளருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

இதனைத் தொடர்ந்து பிரதேச செயலாளர் குறித்த இடத்திலிருந்து செயலகத்திற்குள் சென்றார். இந்நிலையில் அங்கு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் பிரதேச செயலகத்திற்கு முன்பாக கோஷங்களை எழுப்பியவாறு உரிய தீர்வு கிடைக்கும் வரையில் இவ்விடத்தை விட்டுச் செல்ல மாட்டோம் என பிரதேச செயலகம் முன்பாக அமர்ந்திருந்தனர்.

இதனைத்தொடர்ந்து இரண்டாவது முறையாக பிரதேச செயலாளர் மற்றும் மட்டக்களப்பு பொலிஸார் உடனிருந்து பிரச்சினை தொடர்பாக மக்களுடன் கதைத்தபோது மீண்டும் மக்கள், உரிய முறையில் தீர்வை எடுக்காவிட்டால் இவ்விடத்திலிருந்து செல்லமாட்டோம் என்றனர்.

தொடர்ந்து பிரதேச செயலாளர் மீண்டும் அலுவலகத்திற்குள் சென்றார்.

தொடர்ந்து மக்கள் உரிய தீர்வு வழங்க வேண்டும் எனக் கூறி பிரதேச செயலகம் முன்பாக கோஷங்கள் எழுப்பியவாறு இருந்தனர். அதனைத் தொடர்ந்து மூன்றாவது முறையாக பிரதேச செயலாளருடன் ஒருசிலர் பிரச்சினை தொடர்பாக கலந்துரையாடியனர்.

கலந்துரையாடலின்போது பிரதேச செயலாளர் குறித்த அரச காணிகளை அபகரிக்கின்ற நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும், அப்பகுதியில் மரங்களை வெட்டுகின்ற நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள மக்களால் கோரிக்கை முன்வைக்கப்பட்டபோது மட்டக்களப்பு பொலிஸார் அதற்கு உரிய நடவடிக்கைகளை சரியான முறையில் முன்னெடுப்பார்கள் எனவும் வாக்குறுதி அளித்ததன் பிற்பாடு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் அவ்விடத்திலிருந்து விலகிச் சென்றனர்.

# வீட்டுக்குள் ஐஸ் பாவனை: பொலிஸ் கான்ஸ்டபிள் கைது!

வீடொன்றினுள ஐஸ் போதைப் பொருள் பாவித்ததாகக் கூறப்படும் பயிலுனர் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர், சந்தேகத்தின்பேரில் தெஹியோவிட்ட பொலிஸ் அதிகாரிகள் குழுவால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட பயிலுனர் பொலிஸ் கான்ஸ்டபிளிடம் 180 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த சந்தேகத்திற்குரிய பயிலுனர் கான்ஸ்டபிள் மொரட்டுவை தலைமையகப் பொலிஸ் நிலையத்தில் பணிபுரிபவர் எனவும், அவர் கடந்த டிசம்பர் 12ஆம் திகதிமுதல் விடுமுறையில் இருந்ததாகவும், மீண்டும் பணிக்கு சமுகமளிக்கவில்லை எனவும் குறித்த அதிகாரி தெரிவித்தார்.

# புதிய வரிக் கொள்கை நேற்றுமுதல் அமுல்

புதிய வரிக் கொள்கை நேற்று முதல் நடைமுறைக்கு வந்தது.

அதனடிப்படையில், ஒரு இலட்சம் ரூபாவிற்கு அதிகமாக மாதாந்த வருமானம் பெறுவோருக்கு 06 வீதம் தொடக்கம் 36 வீதம் வரை 06 கட்டங்களாக வருமான வரி அறவிடப்படவுள்ளது. அதற்கமைய, மாதமொன்றுக்கு 3,50,000 ரூபாவை வருமானமாக பெறும் ஒருவர் ஒரு மாதத்திற்கு 52,500 ரூபாவை வரியாக செலுத்த வேண்டும்.

# வாகனச் சாரதி லைசனுக்கு கிவ்.ஆர். குறியீடு அறிமுகம்




இந்த ஆண்டுமுதல் வாகனச் சாரதி அனுமதிப்பத்திரங்களை புதுப்பிக்கும் ஒவ்வொரு சாரதிக்கும் கிவ்.ஆர். குறியீட்டுடன் கூடிய புதிய வாகனச் சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்படும் - என மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் - அபிவிருத்தி குசலானி டி சில்வா தெரிவித்தார்.

தற்போது இலங்கையர்களுக்கு நான்கு வகையான வாகனச் சாரதி அனுமதிப்பத்திரங்கள் உள்ளன. அந்த சாரதி அனுமதிப்பத்திரங்கள் அனைத்தும் புதுப்பிக்கப்படும் போது, புதிய கிவ்.ஆர். குறியீடு முத்திரையிடப்பட்ட வாகனச் சாரதி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை, வாகனச் சாரதி அனுமதிப்பத்திரங்களுக்கு புள்ளி குறைப்பு மதிப்பீடு வழங்கும் முறை எதிர்வரும் மார்ச் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் ஆரம்பிக்கப்படும் என மோட்டார் வாகன ஆணையாளர் நாயகம் நிஷாந்த அனுருத்த தெரிவித்திருந்தார்.

இதன்படி, போக்குவரத்து விதி மீறல்களைப் புரிகின்ற வாகனச் சாரதிகள் 24 புள்ளிகளைப் பெற்றால் அவரின் சாரதி அனுமதிப்பத்திரம் இரத்துசெய்யப்படும். அவ்வாறு இரத்துசெய்யப்பட்டதன் பின்னர் குறித்த சாரதி ஒரு வருட காலத்திற்கு அனுமதிப்பத்திரத்திற்கு விண்ணப்பிக்க முடியாது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.





புதுவருட தினத்தை சிறப்பிக்கும் முகமாக ஹற்றன், வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட கிங்கோரா தோட்ட அறநெறிப் பாடசாலையில் கல்விகற்கும் 52 மாணவர்களுக்கு காங்கேசன்துறை, கேமா அறக்கட்டளையினால் நேற்றுமுன்தினம் (01) கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. இது தொடர்பில் சமூக நல்வழிமன்ற அரச சார்பற்ற நிறுவனத்தின் கள இணைப்பாளர் பெரியசாமி அன்பரசி, குறித்த பிரதேசத்தில் கல்விகற்கும் 52 மாணவர்களது தேவை தொடர்பில் நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் கௌசலா சிவாவிடம் கேட்டுக்கொண்டதற்கு இணங்க மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் கௌசலா சிவா தம்பதியினரால் மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.




உடப்பு ஸ்ரீ ருக்மணி சத்தியபாமா சமேத ஸ்ரீ பார்த்தசாரதிப் பெருமாள் திரௌபதி அம்மன் ஆலய வருடாந்த பிரம்மோற்சவ இரதோற்சவம் நேற்று திங்கட்கிழமை (2) காலை 10 மணிக்கு இடம்பெற்றது. வசந்த மண்டபத்தில் விசேட பூஜைகள் இடம்பெற்றதோடு, அம்பாள் உள்வீதி பவனி இடம்பெற்று பின்னர் இரதத்தில் எழுந்தருளி பக்தர்களினால் வடம் பிடித்து தேர் ஆலயத்தை சுற்றி வந்தது. இதன்போது பல நூற்றுக்கணக்கான பக்த அடியார்கள் கலந்துகொண்டு அம்பாளின் அருளைப் பெற்றுக்கொண்டனர் .

(படங்கள்:- உடப்பு செய்தியாளர்)

## வெற்றி நிச்சயம்

"உங்கள் பிரச்சினை எதுவானாலும் ஒருமுறை என்னை தொடர்பு கொண்டால், 100% வெற்றி நிச்சயம்" நடக்காத காரியங்களையும் நடத்திவைக்கும் சக்தி என்னிடம் மட்டுமே உண்டு. என்னை நம்புங்கள். பணப்பிரச்சினை, தொழில் முடக்கம், வியாபார மந்தம், கடன் தொல்லை, முன்னேற்றத்தடை, திறமையிருந்தும் வாழ்க்கையில் முன்னேற முடியாமை, நினைப்பது ஒன்று நடப்பது ஒன்றாக இருத்தல், எதிலும் தோல்வி, எதிரித்தொல்லை, தீராதநோய், போதைவஸ்துப்பாவனை, வழக்கில் வெற்றிபெற, போட்டி பந்தயங்களில் ஜெயிக்க, வெளிநாடுசெல்ல, விற்கப்படாத வீடு/காணி/வாகனம் விற்க, கொடுத்த பணம் திரும்பி வர, படிப்பில் மந்தம், விவாகரத்தை தடுக்க, கணவன்-மனைவி பிரச்சினை, காதல் பிரச்சினை, பிரிந்தவர் ஒன்றுசேர, திருமணத்தடை, குழந்தையின்மை மற்றும் உங்கள் சகல பிரச்சினைகளுக்கும் 48 மணித்தியாலங்களுக்குள் 100% நிரந்தரத் தீர்வை பெற்றுக்கொடுப்பேன் என்று உத்தரவாதம் அளிக்கிறேன்.

உலகப் புகழ்பெற்றவரும் இலங்கையில் நம்பர் 1 மலையாள மாந்திரீக ஜாம்பவான், தத்துவஞானி, மகரிஷி, தேசபந்து, கௌரவ கலாநிதி.

e b a j b . ஸ்ரீமத் சுவாமிஜி—0710192687
h t hh

# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91. விஜேராம மாவத்தை. கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2023, ஜனவரி 03ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை


# வளி மாசடைதலை தொடர விடலாமா?

சுற்றுச்சூழல் பாதிப்புகளும், காற்று மாசு அதிகரிப்பும் உலகில் அதிகரித்த உயிரிழப்புகளுக்குக் காரணம் என்பதை பல்வேறு ஆய்வுகள் தொடர்ந்து உறுதிப்படுத்தி வருகின்றன. சர்வதேச பொதுசுகாதார திட்டத்தின் இயக்குநர் பிலிப் லாண்ட்ரீகன் தலைமையிலான குழு, அமெரிக்காவின் பொஸ்டன் கல்லூரியிலுள்ள மாசு கண்காணிப்பகத்தின் மூலம் நடத்திய ஆய்வின்படி, ஏறத்தாழ ஒரு கோடிக்கும் அதிகமானோர் ஆண்டுதோறும் காற்று மாசு பாதிப்பால் உயிரிழக்கிறார்கள்.

நடப்பு நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்து, அசுத்தமான காற்று காரணமாக ஏற்படும் உயிரிழப்புகள் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன. குறிப்பாக வாகனங்கள், தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் கரியமில வாயு அதிகரிப்பு காற்று மாசுக்கு முக்கியமான காரணமாகக் கூறப்படுகிறது. நகர்மயமாதல், காடுகள் அழிப்பு போன்றவை கரியமில வாயு வெளியேற்றத்தை அதிகரித்து பாதிப்புகளை ஊக்குவிக்கின்றன என்கிறது அந்த ஆய்வு.

கடந்த 22 ஆண்டுகளில், காற்று 55 வீதம் அதிகமாக மாசுபட்டிருப்பதாக அந்த அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. காற்று மாசு மரணங்கள் அதிகமாகக் காணப்படும் உலகின் முதல் 10 தொழில்மயமான நாடுகளின் பட்டியலில் அமெரிக்கா இடம்பெறுகிறது. 2019இல் அமெரிக்காவில் 142,883 உயிரிழப்புகளுக்கு காற்று மாசுதான் காரணம். 'லன்செட் பளனட்ரி ஹெல்த்' என்கிற மருத்துவ இதழின்படி, பங்களாதேஷுக்கும் எத்தியோப்பியாவுக்கும் இடையில் அமெரிக்கா பட்டியலிடப்படுகிறது. முழுமையாக தொழில்மயமான நாடுகளில் அமெரிக்கா மட்டுமே மிக மோசமான பாதிப்பை எதிர்கொள்கிறது.

கொரோனா நோய்த்தொற்றுக்கு முந்தைய ஆய்வுத் தரவுகளின் அடிப்படையில் சியாட்டிலில் உள்ள 'இன்ஸ்ட்டியூட் ஃபோர் ஹெல்த் மெட்ரிக்ஸ்' வெளியிட்டிருக்கும் ஆய்வின்படி, மிக அதிகமான காற்று மாசு தொடர்புடைய உயிரிழப்புகள் காணப்படும் நாடுகள் இந்தியாவும், சீனாவும். ஆண்டுதோறும் சீனாவில் 24 இலட்சமும், இந்தியாவில் 22 இலட்சமும் காற்று மாசு தொடர்புடைய பாதிப்புகளால் ஏற்படும் உயிரிழப்புகள் நிகழ்கின்றன. இந்த இரண்டு நாடுகளுமே மிக அதிகமான மக்கள்தொகை கொண்ட நாடுகள் என்பதால், வீதத்தின் அடிப்படையில் கடுமையான பாதிப்பாகக் கருத முடியாது.

ஆண்டுதோறும் காற்று மாசு தொடர்பான நோய்கள் அதிகரித்து வருவதற்கு நகர்மயமாதல் மிக முக்கியமான காரணம். இப்போதும்கூட, நுரையீரல் தொடர்பான தொற்றுகள் நகரங்களில் காணப்படும் அளவுக்கு கிராமங்களில் இல்லை. அதேநேரத்தில், தொழிற்சாலைகள் அமைந்திருக்கும் இடங்களிலும், அனல்மின் நிலையங்கள் காணப்படும் பகுதிகளிலும் கடுமையான காற்று மாசு பாதிப்பு காணப்படுவதால் நுரையீரல் தொற்று ஊக்குவிக்கப்படுவதாக ஆய்வுகள் உறுதிப்படுத்துகின்றன.

மக்கள்தொகை அடிப்படையிலான உயிரிழப்பு வீதத்தைக் கணக்கிடும்போது கீழேயிருந்து 31ஆவது இடத்தில் அமெரிக்கா இருக்கிறது. ஒரு இலட்சம் பேருக்கு 43.6 பேர் என மாசு காரணமான மரணங்கள் அங்கே பதிவாகியிருக்கின்றன. மத்திய ஆபிரிக்கக் குடியரசு, உலகிலேயே மிக அதிகமான காற்று மாசு தொடர்பான மரணம் காணப்படும் நாடு. இங்கு ஒரு இலட்சம் பேருக்கு சுமார் 300 உயிரிழப்புகள் மாசு காரணமாக ஏற்படுகின்றன. அவற்றில் பெரும்பாலும் அசுத்தமான நீர் தொடர்பானவை.

உலகிலேயே காற்று மாசு மிகவும் குறைவான நாடுகளாக புருணை, கட்டார், ஐஸ்லாந்து ஆகியவை பட்டியலிடப்பட்டிருக்கின்றன. அந்த நாடுகளில் அதிகபட்சமாக மாசு தொடர்பான உயிரிழப்புகளின் எண்ணிக்கை ஒரு இலட்சத்துக்கு 15 முதல் 23 வரை மட்டுமே. சர்வதேச அளவிலான சராசரி ஒரு இலட்சம் பேருக்கு 117 உயிரிழப்புகளாகும்.

பெரும்பாலான காற்று மாசு தொடர்புடைய உயிரிழப்புகள் இறப்புச் சான்றிதழில் குறிப்பிடப்படுவதில்லை. இதயநோய், பக்கவாதம், நுரையீரல் புற்றுநோய், நுரையீரல் தொற்றுகள், சர்க்கரை நோய் என்று மாசுடன் தொடர்புடைய ஏனைய நோய்களை காரணமாகக் குறிப்பிடுவதாக நோய் பரவுகிற தன்மை குறித்த ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

அமெரிக்காவின் இதயநோய் தொடர்பான ஆய்வுகள், புதைபடிவ எரிபொருட்கள் காரணமாக காற்றில் கலக்கும் நுண்ணிய மாசுப் பொருட்கள் இதயநோய்கள் தொடர்பான மரணங்களுக்குக் காரணம் என்று தெரிவிக்கின்றன. கடந்த 10 ஆண்டுகளில் உலக அளவில் நடத்தப்பட்ட பல ஆய்வுகளும் அதை உறுதிப்படுத்தியிருக்கின்றன. பெரும்பாலும் இரத்த அழுத்தமும் இரத்தக் கொழுப்பும் அதிகரிப்பது குறித்து கவனம் செலுத்தப்படுகிறது. காற்று மாசு அகற்றப்படுவதும் இதய ஆரோக்கியத்துக்கு மிகவும் அவசியம் என்பதை பெரும்பாலும் மறந்துவிடுகிறார்கள் என்கின்றன அந்த ஆய்வுகள்.

நான்கில் மூன்று மாசு தொடர்பான மரணங்களும், காற்று மாசு தொடர்பானவை. அனல்மின் நிலையங்கள், மோட்டார் வாகனங்கள் ஆகியவற்றிலிருந்து வெளியேறும் புகைதான் மிக முக்கியமான காரணம் என்று பல்வேறு ஆய்வுகள் உறுதிப்படுத்தியும்கூட, உலகினால் அவற்றைத் தவிர்க்க முடியவில்லை. மரபுசாரா எரிசக்தி குறித்த விழிப்புணர்வு அதிகரித்திருக்கிறது என்றாலும்கூட, புதைபடிவ எரிசக்திக்கு முழுமையான மாற்றாக அவை மாறவில்லை.

தெற்காசியாவில் மரணத்துக்கு மிக முக்கியமான காரணமாக காற்று மாசு குறிப்பிடப்பட்டும்கூட, இனியும் அதைக் கட்டுப்படுத்துவதில் முனைப்புக் காணப்படவில்லை என்பது வேதனையளிக்கிறது.கடந்த சில வாரங்களாக இலங்கையில்கூட வளி மாசு ஏற்பட்டது. ஆனால், அது அப்படியே தொடர்ந்த நிலைமையே காணப்பட்டது. அதனைக் கட்டுப்படுத்த எந்த ஏற்பாடுகளும் இல்லை. அந்தளவு விஞ்ஞான ரீதியாக நம் நாடு முன்னேறாமை ஒரு காரணம். ஆனால், மாசு பரவலைக் கட்டுப்படுத்துவதைவிட மாசு ஏற்படுவதை, உருவாவதை குறைக்கும் வழிவகைகளை உலக நாடுகள் ஆராய வேண்டும். அதற்கு முன்னுரிமை அளித்தல் வேண்டும்.

# காங்கிரஸுக்குக் கைகொடுக்குமா ராகுலின் நடைப்பயணம்..?

எம்.முத்துமாரி

ஆம் ஆண்டின் அரசியல் நிகழ்வுகளில் முக்கியமான ஒன்று ராகுல் காந்தியின் அகில இந்திய அளவிலான ஒற்றுமை நடைப்பயணமாகும்.

காங்கிரஸ் கட்சியை வலுப்படுத்தவும் மத்திய பா.ஜ.க. அரசுக்கு எதிராக மக்களை ஒன்றுதிரட்டவும் அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி, கன்னியாகுமரியில் இருந்து காஷ்மீர் வரை இந்திய ஒற்றுமை நடைப்பயணத்தை (பாரத் ஜோடோ யாத்ரா) மேற்கொண்டுள்ளார். 12 மாநிலங்கள், 2 யூனியன் பிரதேசங்கள் வழியாக 148 நாட்கள், மொத்தம் 3,600 கி.மீ. தொலைவு நடைப்பயணம் மேற்கொள்கிறார்.

கடந்த செப்டெம்பர் 7ஆம் திகதி கன்னியாகுமரியில் ராகுல் காந்தியின் இந்தப் பயணத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் தேசியக்கொடியை வழங்கி தொடக்கிவைத்தார். காங்கிரஸ் மூத்த தலைவர்கள், தி.மு.க. கூட்டணிக் கட்சித் தலைவர்கள், முக்கிய பிரமுகர்கள் எனப் பலரும் இதில் கலந்துகொண்டனர். கன்னியாகுமரியில் தொடங்கிய இந்தப் பயணம் இன்று 100 நாட்களைக் கடந்துள்ளது.

தமிழகத்தில் செப்டெம்பர் 10ஆம் திகதி



வரையிலும்,
தொடர்ந்து கேரளத்தில் 19 நாட்கள், கர்நாடகத்தில் 16 நாட்கள், ஆந்திரத்தில் 6 நாட்கள், தெலங்கானாவில் 7 நாட்கள், மகாராஷ்டிரத்தில் 14 நாட்கள், மத்திய பிரதேசத்தில் 2 நாட்கள், ராஜஸ்தானில் 16 நாட்கள், ஹரியானாவில் 3 நாட்கள் என 108ஆவது நாளாக தலைநகர் டில்லிக்குள் நுழைந்தது இந்தப் பயணம்.

புத்தாண்டையொட்டி ஜனவரி 2 வரை ஓய்வு அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், ஜனவரி 3ஆம் திகதி மீண்டும் டில்லியில் தொடங்கி காஷ்மீரில் முடிவடைகிறது.

### காங்கிரஸ் நிலை

2019 நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி படுதோல்வி அடைந்ததையடுத்து ராகுல் காந்தி, கட்சித் தலைவர் பதவியில் இருந்து விலகினார். கட்சியின் தலைவராக இருக்க மூத்த தலைவர்கள் பலர் வலியுறுத்தியும் ராகுல் மறுத்துவிடவே இடைக்காலத் தலைவராக சோனியா காந்தி பொறுப்பேற்றார். உடல்நிலை சரியில்லாத காரணத்தால் சோனியாவின் செயற்பாடுகளும் பெரிதாக இல்லை. கட்சியின் வளர்ச்சியிலும் பெரிதாக முன்னேற்றம் இல்லை. இதனால் கட்சிக்குள் பல்வேறு பிரச்சினைகள் எழுந்தன.

இதனிடையே, நடப்பு ஆண்டு உத்தர பிரதேசம், உத்தரகண்ட், பஞ்சாப், கோவா, மணிப்பூர் என 5 மாநில சட்டப்பேரவைத் தேர்தல்களில் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட உத்தர பிரதேச பேரவைத் தேர்தலில் காங்கிரஸ் படுதோல்வியை சந்தித்தது. காங்கிரஸ் பொதுச்செயலாளர் பிரியங்கா காந்தி அந்த மாநிலத்தில் தீவிர பிரசாரத்தை முன்னெடுத்தும் காங்கிரஸ் வெற்றி பெறவில்லை. பஞ்சாபில் ஆம் ஆத்மி ஆட்சியைக் கைப்பற்றியது, இதனால் மத்திய அரசியலில் காங்கிரஸுக்கு மாற்றாக ஆம் ஆத்மி என அரசியல் வட்டாரங்கள் பேசத் தொடங்கின. இதுவும் காங்கிரஸுக்கு பெரும் பின்னடைவாகப் பார்க்கப்பட்டது.

5 மாநிலத் தேர்தல் முடிவுகளின் எதிரொலியாக, கட்சியின் தலைமைப் பதவியில் இருந்து நேரு குடும்பத்தினர் விலக வேண்டும் என்றும் நேரு குடும்பத்தைச் சாராத ஒருவர் கட்சியின் தலைவர் ஆக வேண்டும் என்றும் 23 காங்கிரஸ் தலைவர்கள் இணைந்து வலியுறுத்தினர். இது பெரிய சர்ச்சையை ஏற்படுத்தியது. மேலும், உட்கட்சிப் பிரச்சினைகளால் குலாம் நபி ஆசாத் உள்ளிட்ட காங்கிரஸின் மூத்த தலைவர்கள் பலரும் கட்சியிலிருந்து வெளியேறி வந்தனர்.

கட்சியின் தலைமை வலுவின்மையும் கட்சித் தலைவர்களிடையே இருக்கும் ஒற்றுமையின்மையும் கட்சியின் சீர்திருத்தமின்மையுமே காங்கிரஸின் வீழ்ச்சிக்குக் காரணம் என்று பேசப்பட்டது.

இந்த சூழ்நிலையில்தான் வீழ்ச்சியில் இருந்து கட்சியை மீட்டெடுக்கும் முயற்சியில் ராகுல் காந்தி இறங்கியுள்ளார்.

நடைப்பயணத்தின் இடையே நடைபெற்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் தேர்தலிலும் ராஜஸ்தான் முதல்வர் அசோக் கெலாட் - சச்சின் பைலட் இடையே நடந்த பிரச்சினையும் கட்சியில் சலசலப்பை ஏற்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

### நடைப்பயணத்துக்கு வரவேற்பு

ராகுலின் நடைப்பயணம் தொடங்கியபோது, கன்னியாகுமரியில் இருந்து காஷ்மீர் வரை 3,500 கி.மீ. பயணம் என்பது சாத்தியமா என முதலில் பல்வேறு விமர்சனங்கள் எழுந்தன. ஆனால், எந்த சூழ்நிலையிலும் நடைப்பயணத்தை கைவிடமாட்டேன் என்று ராகுல் காந்தி திட்டவட்டமாக தெரிவித்தார். அதன்படியே தற்போது நடைப்பயணம் 100 நாட்களைக் கடந்துள்ளது.

ராகுலின் இந்த நடைப்பயணத்துக்கு நாட்டு மக்களிடையே நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. மத்தியில் பா.ஜ.கவுக்கு மாற்று வேண்டுமென நினைப்பவர்கள் இதனை ஆதரித்து வருகின்றனர். காங்கிரஸுடன் கூட்டணியில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர்கள் பலரும் இதில் கலந்துகொண்டு தங்களது ஆதரவைத் தெரிவித்து வருகின்றனர்.

செல்லும் வழியில் எல்லாம் ராகுல் காந்தி மக்களுடன் கலந்துரையாடுவதும் செய்தியாளர்களை சந்தித்துப் பேசி வருவதும் அரசியலில் முக்கியமானதாகப் பார்க்கப்படுகிறது. கட்சி சாராது குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை பலரும் இதில் கலந்துகொள்கின்றனர்.

தி.மு.க. எம்.பி. கனிமொழி, சிவசேனையின் ஆதித்ய தாக்கரே, தேசியவாத காங்கிரஸ் எம்.பி. சுப்ரியா சுலே உள்ளிட்ட எதிர்க்கட்சித் தலைவர்கள் கலந்துகொண்டுள்ளனர்.

இந்திய ரிசர்வ் வங்கியின் முன்னாள் ஆளுநர் ரகுராம் ராஜன் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள், முன்னாள் இராணுவத்தினர், சினிமா பிரபலங்கள் உடபட பொதுவான நபர்கள் பலரும் இதில் கலந்துகொண்டு ராகுலுக்கு ஆதரவு தெரிவித்து வருகின்றனர். கூட்டணியில் இல்லாத மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவரும் நடிகருமான கமல்ஹாசன் டில்லி நடைப்பயணத்தில் கலந்துகொண்டதும் கவனத்தைப் பெற்றது.

### சுவாரஸ்ய நிகழ்வுகள்

மைசூரில் கொட்டும் மழையில் ராகுல் காந்தி உரையாற்றியமை, மைசூரில் நடைப்பயணத்தில் கலந்துகொண்ட சோனியா காந்தி ஷூ லேஸ் கழன்றுவிட ராகுல் காந்தி கட்டிவிட்டமை, கர்நாடகத்தில் சாதி வன்முறையால் 1993இல் மூடப்பட்ட சாலை பாரத் ஜோடோ சாலை என மீண்டும் திறக்கப்பட்டமை, நடைப்பயணத்தில் குழந்தைகளுடன் கிரிக்கெட் மற்றும் உதைபந்து விளையாடியமை, டில்லியில் சப்பாத்தைத் தொலைத்த சிறுமியை தோளில் தூக்கிச் சென்றமை, பா.ஜ.கவினருக்கு பிளையிங் கிஸ் கொடுத்தமை, உடன் பயணித்த தொண்டர்களுடன் தனிப்பட்ட விடயங்களை பகிர்ந்து கொண்டமை என இந்தப் பயணத்தில் பல சுவாரஸ்யமான, நெகிழ்ச்சியான நிகழ்வுகள் இருந்தன. இது தொடர்பான புகைப்படங்களும் இணையத்தில் வைரலாகின.



### நடைப்பயணமும் அரசியல் மாற்றங்களும்

சுதந்திரத்திற்கு முந்தைய மகாத்மா காந்தியின் தண்டி யாத்திரை வரலாற்றில் ஒரு முக்கியமான நிகழ்வாகும். அடுத்ததாக, 1970இல் ஜெயப்பிரகாஷ் நாராயணன் மேற்கொண்ட நடைப்பயணம், 1983இல் ஜனதா கட்சித் தலைவர் சந்திரசேகர் மேற்கொண்ட பயணம், 1989இல் அயோத்தியில் இராமர் கோயில் கட்டக் கோரி அத்வானி மேற்கொண்ட பயணம், 1991இல் முரளி மனோகர் ஜோஷியின் பயணம் என இந்த பயணங்கள் அரசியலில் மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கின்றன.

காங்கிரஸ் கட்சியை வீழ்ச்சியில் இருந்து மீட்டெடுக்க ராகுல் காந்தியும் இந்த உத்தியை



கையில் எடுத்திருக்கிறார்.

### காங்கிரஸ் மீட்கப்படுமா?

2024 தேர்தலில் காங்கிரஸின் இந்த ஒற்றுமை நடைப்பயணம் முக்கிய மாற்றத்தை ஏற்படுத்தும் என கட்சியின் மூத்த தலைவர்கள் உறுதிபடத் தெரிவித்துள்ளனர். அதற்கேற்பவே மக்களும் வரவேற்பளித்து வருவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆனால், ராகுல் நடைப்பயணம் தொடங்கிய பின்னர் நடந்த குஜராத் சட்டப்பேரவைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி தோல்வியையே தழுவியமை சிந்திக்க வேண்டிய விடயமே. ஒருபக்கம், குஜராத் பா.ஜ.கவின் கோட்டை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. மற்றொரு மாநிலமான ஹிமாசல பிரதேசத்தில் பா.ஜ.கவை காலி செய்து காங்கிரஸ் ஆட்சியைப் பிடித்தமை அக்கட்சிக்கு சற்று ஆறுதல் எனலாம். ராகுலின் நடைப்பயணம் தாக்கத்தை ஏற்படுத்தியதா என்பது எதிர்வரும் கர்நாடக சட்டப்பேரவைத் தேர்தலில் தெரியவரும். அதிகபட்சமாக 2024 நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள்வரை காத்திருக்கலாம்.

ஆனால், இந்திய ஒற்றுமை நடைப்பயணம் 2024 மக்களவைத் தேர்தலுக்காக அல்ல, பா.ஜ.க. மற்றும் ஆர்.எஸ்.எஸ். மூலம் நாட்டில் உருவாக்கப்படும் பிரிவினைவாதத்துக்கு எதிராக மக்களை ஒன்றிணைக்கவே என்று ராகுல் காந்தி கூறுகிறார்.

எனினும், தற்போதைய சூழ்நிலையில் பா.ஜ.க. பெரும்பாலான மாநிலங்களில் ஆட்சியில் உள்ளதாலும் காங்கிரஸ் கட்சிக்கு மாற்றாக ஆம் ஆத்மி முக்கியத்துவம் பெறுமென அரசியல் விமர்சகர்கள் கூறுவதாலும் கட்சியை பழைய நிலைக்கு மீட்டெடுப்பது என்பது காங்கிரஸ் கட்சிக்கு பெரும் சவால்தான்.

நேரு குடும்பத்தில் இல்லாத ஒருவர் தலைவராக வேண்டும் என்று கட்சியின் மூத்த தலைவர்கள் உள்ளிட்ட ஒரு தரப்பினர் கூறியதன்படி, கார்கேவும் தலைவராக தேர்வு செய்யப்பட்டுவிட்டார். ஆனால், கட்சியின் தலைவராக ராகுலே தொடர்ந்திருக்கலாம், மக்களுக்கு நன்கு தெரிந்த முகமாக, நேரு குடும்பத் தலைவர்களே இருந்தால் கட்சியை மீட்டெடுக்க வாய்ப்புள்ளது என்று மற்றொரு தரப்பினரும் கூறி வருகின்றனர்.

கட்சியின் புதிய தலைவராக பொறுப்பேற்றுள்ள கார்கேவின் அடுத்தகட்ட நடவடிக்கைகளைப் பொறுத்தும் கட்சியின் நிலைமை இருக்கிறது. இத்துடன் ராகுல் காந்தியின் இந்த நடைப்பயணமும் சேர்ந்து இந்திய அரசியலில் தாக்கத்தை ஏற்படுத்துமா, காங்கிரஸ் கட்சியை மீட்டெடுக்குமா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

என்னதான் நடந்தாலும் வரலாற்றில் ஒரு முக்கியமான நிகழ்வை ராகுல் காந்தி பதித்துவிட்டார் என்றுதான் சொல்ல வேண்டும்!

(நன்றி - தினமணி)

## இன்றைய நாளில்...

- 1888 – '91-சமீ யேம்ஸ் லிக்' தொலைநோக்கி முதன்முறையாக கலிபோர்னியாவில் பயன்படுத்தப்பட்டது. இதுவே அந்நேரத்தில் உலகின் மிகப் பெரிய முறிவுத் தொலைநோக்கியாகும்.
- 1925 – இத்தாலியின் ஆட்சியதிகாரம் முழுவதும் தன்னிடம் உள்ளதாக பெனிட்டோ முசோலினி அறிவித்தார்.
- 1957 – முதலாவது மின் கடிகாரத்தை ஹமில்ட்டன் வொட்ச் கம்பனி அறிமுகப்படுத்தியது.
- 1974 – யாழ்ப்பாணத்தில் நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு ஆரம்பமானது.
- 1977 – ஆப்பிள் கணினி நிறுவனமயப்படுத்தப்பட்டது.
- 1995 – விடுதலைப் புலிகள் மற்றும் இலங்கை அரசுக்கிடையிலான பேச்சுகளின் இரண்டாம் கட்டம் ஆரம்பமானது.

## நக்கல் நமசிவாயம்

புதுவருசத்துக்கு கோல்பேசில கூடின கூட்டத்தைப் பார்க்கேக்க, நாட்டில போராட்டம் புரட்சி எண்ட ஒண்டு நடந்ததா எண்டு யோசினையாக் கிடக்குது..!



# சகலரினதும் எதிர்பார்ப்பை நிறைவேற்ற 2023 புதிய வருடத்தில் அணிவகுப்போம்

## புத்தாண்டுக் கடமைகளை ஆரம்பிக்கும் நிகழ்வில் பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ தெரிவிப்பு











முன்னெப்பொழுதும் இல்லாத அளவு சவால்களுக்கு நாடு முகங்கொடுத்திருக்கும் நிலையில், நாட்டிலுள்ள உயரிய நிறுவனத்தின் பணியாட்தொகுதியினர் என்ற ரீதியில் மக்களின் எதிர்பார்ப்புகளை பொறுப்புடன் நிறைவேற்ற புதிய வருடத்தில் அனைவரும் அணிவகுக்க வேண்டும் என பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ நேற்று (02) நாடாளுமன்ற பணியாட்தொகுதியினர் முன்னிலையில் உரையாற்றும்போது தெரிவித்தார்.

நாடாளுமன்ற வளாகத்தில் நேற்று (02) நடைபெற்ற 2023ஆம் ஆண்டுக்கான அரச ஊழியர்கள் சத்தியப்பிரமாணம்/ உறுதியுரை எடுத்துக்கொள்ளும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கொவிட் சவால்களை வெற்றிகொண்ட பின்னர் பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுக்கும் நிலை ஏற்பட்டதாகவும், தற்பொழுது காணப்படும் பின்னடைவுகளை வெற்றிகொள்ள அரச பணியாளர்களுக்கு விசேட பொறுப்புக் காணப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். குறிப்பாக பெருந்தொகையான அரசாங்க ஊழியர்கள் ஒரே நேரத்தில் ஓய்வுபெறும் பின்னணியில் முன்னெப்போதையும் விட சவாலான சூழலில் மக்களுக்கான தமது பொறுப்பை நிறைவேற்ற வேண்டியுள்ளதாகவும் பிரதி சபாநாயகர் சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்ற பிரதான நுழைவாயிலின் வாசல்படிகளுக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள கொடிக்கம்பத்தில் பிரதி சபாநாயகர் தேசியக் கொடியை ஏற்றிவைத்ததைத் தொடர்ந்து நிகழ்வுகள் ஆரம்பமாகின.

அதனைத் தொடர்ந்து நாட்டுக்காக உயிர்நீத்த படைவீரர்கள் உள்ளிட்டவர்களுக்கு இரண்டு நிமிடங்கள் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

நாடாளுமன்றத்தின் சகல பணியாளர்களும் அரசசேவை உறுதியுரை/சத்தியப்பிரமாணம் எடுத்துக்கொள்ளும் நிகழ்வு இதன் பின்னர் நடைபெற்றது.

இந்நிகழ்வில் உரையாற்றிய நாடாளுமன்ற பணியாட்தொகுதியின் பிரதானியும் பிரதிச் செயலாளர் நாயகமுமான குஷானி ரோஹணதீர குறிப்பிடுகையில், தற்பொழுது நிலவும் சிக்கல் நிறைந்த சூழ்நிலையிலிருந்து நாட்டைக் காப்பாற்ற, சவாலான சூழலில் அதிகபட்ச வினைத்திறனுடன் செயற்பட வேண்டும் என்றார்.

நாடாளுமன்றத்தில் பல புதிய குழுக்கள் ஸ்தாபிக்கப்படவுள்ளதாகவும், ஆட்சேர்ப்பு மற்றும் நிதி ஒதுக்கீடுகள் மட்டுப்படுத்தப்பட்ட பின்னணியில் நாம் ஒரே குடும்பமாக அதிக அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டுமென்றும் பிரதி செயலாளர் நாயகம் வலியுறுத்தினார்.

நிலவிய கொவிட் சவால்களுக்கு மத்தியில் நாடாளுமன்ற செயற்பாடுகளை தடையின்றி முன்னெடுத்துச் செல்ல நாடாளுமன்ற பணியாட் தொகுதியினர் வழங்கிய ஒத்துழைப்புகளுக்கும் பிரதி செயலாளர் நாயகம் நன்றி தெரிவித்தார்.

இந்நிகழ்வில் நாடாளுமன்றத்தின் உதவிச் செயலாளர் நாயகம் டிகிரி கே.ஜயதிலக, திணைக்களங்களின் பிரதானிகள், நாடாளுமன்ற பணியாட்தொகுதியினர் மற்றும் இணைந்த சேவைகளின் பணியாளர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

# புதிய ஆண்டில் திடமாக முன்னேறுவோம்

## அமைச்சர் டக்ளஸ் திடசங்கற்பம்








பழையன கழிதலும் புதியன புகுதலும் என்பதற்கு அமைய மக்களின் வலுப்படுத்தும் வகையிலான மாற்றங்களை உள்வாங்கி திடமாக நாட்டை முன்னேற்றுவதற்கு அனைவரும் திடசங்கற்பம் பூணவேண்டும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

பிறந்திருக்கின்ற 2023ஆம் ஆண்டில் கடற்றொழில் அமைச்சின் செயற்பாடுகளை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பிக்கும் நிகழ்வு, மாளிகாவத்தையில் அமைந்துள்ள கடற்றொழில் அமைச்சில் நேற்று நடைபெற்றது.

இதன்போது, தேசியக் கொடியை ஏற்றி வைத்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, புதிய வருடத்திற்கான உறுதிமொழியைத் தொடர்ந்து உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த, அமைச்சின் செயலாளர் திருமதி இந்து ரத்நாயக்கா, கடற்றொழில் அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் கே. தயானந்தா உட்பட திணைக்களங்களின் தலைவர்கள், நிறைவேற்றுப் பணிப்பாளர்கள், கடற்றொழில் அமைச்சரின் செயலாளர்கள் மற்றும் கடற்றொழில் அமைச்சின் பணியாளர்கள் அனைவரும் கலந்துகொண்டனர்.

# ஜனாதிபதி செயலகத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டம்




ஜனாதிபதி செயலகத்திற்கு அருகில் நேற்று ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஊழியர் நம்பிக்கை நிதியத்தில் மோசடி இடம்பெற்று பல வருடங்கள் கடந்துள்ள போதும் தமக்கு தீர்வு கிடைக்கவில்லை என வலியுறுத்தி குறித்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதேவேளை அங்கு கலகத் தடுப்புப் பிரிவினர் மற்றும் பொலிஸார் குவிக்கப்பட்டிருந்ததுடன், நீர்த்தாரை வண்டிகளும் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு ஆர்ப்பாட்டப் பிரதிநிதிகள் சிலர் ஜனாதிபதி செயலகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மலேசிய உயர்ஸ்தானிகராலய புதிய அலுவலகம் திறப்பு









இலங்கைக்கான மலேசிய உயர்ஸ்தானிகராலயத்தின் புதிய அலுவலகம் நேற்று (02) திங்கட்கிழமை மலேசியாவின் மலாக்கா மாநில ஆளுநர் துன் முஹமட் அலி ருஸ்தாமினால் உத்தியோகபூர்வமாக திறந்துவைக்கப்பட்டது.

கொழும்பு – 07, பான்ஸ் பிளேஸில் புதிய உயர்ஸ்தானிகராலயம் அமையப் பெற்றுள்ளது. இலங்கைக்கான மலேசிய உயர்ஸ்தானிகர் தான் யாங் தாய் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் இராஜதந்திரிகள், அரசியல் பிரமுகர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# பிரித்தானிய முன்னாள் பிரதமர் டேவிட் கெமரன் ஜனாதிபதி ரணிலுடன் சந்திப்பு



தனிப்பட்ட விஜயமாக இலங்கை வந்துள்ள பிரித்தானியாவின் முன்னாள் பிரதமர் டேவிட் கெமரன் நேற்று (02) முற்பகல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி அலுவலகத்தில் சந்தித்தார். ஜனாதிபதியுடன் சிநேகபூர்வ கலந்துரையாடலில் ஈடுபட்ட கெமரன், ஜனாதிபதிக்கு புத்தாண்டு வாழ்த்துகளையும் தெரிவித்தார். தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க ஆகியோரும் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

# காணி உறுதிப்பத்திரங்களை ஒன்லைன் ஊடாக பதியலாம்

காணி உறுதிப்பத்திரங்களை இணையவழியின் ஊடாக பதிவு செய்யும் நடவடிக்கையை ஆரம்பிக்கத் தீர்மானித்துள்ளதாக பதிவாளர் நாயகம் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் சில தினங்களுக்குள் 07 பதிவாளர் அலுவலகங்களின் ஊடாக இந்த நடவடிக்கையை ஆரம்பிக்கவுள்ளதாக பதிவாளர் நாயகம் பிரபாத் அபேசிங்க குறிப்பிட்டார்.

## 02.01.2023 நாணய மாற்று வீதம்

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 132 4105 | 144 0278 |
| கனேடியன் டொலர் | 153 3326 | 165 5023 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 40 1863 | 43 377 |
| யூரோ | 272 7048 | 288 4568 |
| ஜப்பான் யென் | 1 6264 | 1 7383 |
| சிங்கப்பூர் டொலர் | 156 3184 | 167 7 36 |
| ஸ்ரேலிங் பவுன் | 322 48 3 | 34 5512 |
| சுவிஸ் பிராங் | 275 8512 | 3 4 3232 |
| ஐ.அ.டொலர் | 25 3 70 | 260 5 57 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 852 815 |
| குவைட் | குவைட் தினார் | 0,075 8 44 |
| ஓமான் | ஓமான் றியால் | 832 828 |
| கட்டார் | கட்டார் றியால் | 88 0 1 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 85 4671 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 87 76 |

# நுவரெலியா மாநகர சபையின் புது வருட அலுவலகப் பணிகள் ஆரம்பம்



- நானுஓயா நிருபர் -

2023 புத்தாண்டை முன்னிட்டு நுவரெலியா மாநகர சபையின் புது வருடத்திற்கான அலுவலக பணிகள் ஆரம்ப நிகழ்வு மாநகர முதல்வர் சந்தனலால் கருணாரட்ன தலைமையில் நேற்று திங்கட்கிழமை காலை இடம்பெற்றது.

ஆரம்ப நிகழ்வாக மாநகர முதல்வரால் தேசியக் கொடி ஏற்றப்பட்டு, மாநகர ஊழியர்களால் தேசிய கீதம் இசைக்கப்பட்டது. தொடர்ந்து அலுவலகப் பணிகளுக்கான உறுதிமொழி வாசிக்கப்பட்டு ஊழியர்களால் உறுதிமொழி எடுக்கப்பட்டது. இதன் பின்னர் வழமை போல் அலுவலகப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இந்நிகழ்விற்கு மாநகர சபை முதல்வர், ஆணையாளர், மாநகர சபையின் உறுப்பினர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
ஞாயிற்றுக்கிழமை 2023.01.01
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

**மஹஜன சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம்: 4987 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 12,393,807.00
ஆங்கில எழுத்து: F — வெற்றி இலக்கங்கள்: 0 7 6 7 2 4

**கொவிசெத** — சீட்டிழுப்பு இலக்கம்: 3229 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 67,454,014.40
ஆங்கில எழுத்து: A — வெற்றி இலக்கங்கள்: 05 11 36 71

**ஜாதிக சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம்: 1442 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 12,905,864.80
வெற்றி இலக்கினம்: மகரம் — வெற்றி இலக்கங்கள்: 3 6 1 3 1 6

**தன நிதானய** — சீட்டிழுப்பு இலக்கம்: 1017 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 140,392,454.00
ஆங்கில எழுத்து: I — வெற்றி இலக்கங்கள்: 26 35 39 55

**ராசி சுப பலன்** (Handahana) — சீட்டிழுப்பு இலக்கம்: 296 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 2,544,060.60
வெற்றி இலக்கினம்: மகரம் — வெற்றி இலக்கங்கள்: 11 16 19 54 — விசேட இலக்கினம்: மகரம்

**மெகா பவர்** — சீட்டிழுப்பு இலக்கம்: 1335 — அடுத்த மெகா சுப்பர் பரிசு: ரூ. 290,137,526.00
ஆங்கில எழுத்து: L — சுப்பர் இலக்கம்: 01 — வெற்றி இலக்கங்கள்: 41 48 56 79
அடுத்த பவர் சுப்பர் பரிசு: ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு: ரூ. 10,000,000.00

# இரத்தினக்கல் அகழ்வால் ஆற்று நீரை பயன்படுத்த முடியாமல் மக்கள் அவதி

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

காவத்தையை ஊடறுத்து ஓடும் வே கங்கை ஆற்றில் இடம்பெற்று வரும் சட்டவிரோத இரத்தினக்கல் அகழ்வால் இந்த ஆற்று நீரைக் குடிநீராகவும் ஏனைய தேவைகளுக்கும் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக இப்பிரதேசப் பொதுமக்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.



இப்பிரதேச ஆற்றங்கரைவாழ் மக்களின் குடிநீர் மற்றும் ஏனைய தேவைகள் இந்த ஆற்றின் நீராலேயே நிறைவேற்றப்பட்டு வருகிறது. இந்நிலையில் இரத்தினக்கல் அதிகார சபையின் அனுமதிப்பத்திரம் பெற்றும் - பெறாமலும் ஆற்றின் நடுவிலும் ஆற்றங்கரை ஓரங்களிலும் இரத்தினக்கல் அகழ்வில் ஈடுபடுவதால் ஆற்றங்கரைகள் இடிந்து விழுவதுடன் கரைந்தும் வருகின்றன. இதனால் ஆற்று நீர் சேறாக மாறி விடுவதாகவும் சுற்றாடல் மாசடைந்து வருவதுடன் ஆற்று நீரை மனிதர்கள் தங்களது தேவைகளுக்காகப் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் இப்பிரதேச பொதுமக்களும் சுற்றுச்சூழல் ஆர்வலர்களும் முறையிட்டுள்ளனர்.

இவ்விடயமாக இரத்தினக்கல் அதிகார சபை, அரசாங்க நிறுவனங்கள், ஜனாதிபதி, பிரதமர் உட்பட பல தரப்பினருக்கு அறிவித்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என இவர்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விடயமாக முறையான நடவடிக்கை மேற்கொள்ளாவிட்டால் இதை விடப் பாரதூரமான விளைவுகளை எதிர்காலத்தில் அனைவரும் சந்திக்க வேண்டி வரும் எனவும் இவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

# இரண்டு வேன்கள் மோதி விபத்து– 12 பேர் காயம்

(ஏ.ஏ.எம்.பாயீஸ்)

இரண்டு வேன்கள் நேருக்கு நேர் மோதியதால் இடம்பெற்ற விபத்தொன்றில் 12 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். கேகாலை - மொரகொட பிரதேசத்தில் கடந்த 31ஆம் திகதி இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கொழும்பிலிருந்து தெல்தோட்டை வரையில் பயணித்துக் கொண்டிருந்த வேன் ஒன்றும் கண்டியிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த வேன் ஒன்றுமே இவ்வாறு நேருக்கு நேர் மோதி விபத்தில் சிக்கின.

இவ்விபத்தில் இரு வேன்களிலும் பயணித்த மூன்று குழந்தைகள் உட்பட 12 பேர் காயமடைந்து கேகாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் ஒருவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக கேகாலை வைத்தியசாலை



வட்டாரம் தெரிவித்துள்ளது. இவ்விபத்து குறித்து கேகாலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# லயன்ஸ் கழகத்தின் புதுவருடப் பரிசு

(கண்டி நிருபர்)

கண்டி, திகனை பிரதேச பொதுமக்களுக்கு புத்தாண்டுப் பரிசாக சுமார் 25 இலட்சம் ரூபா பெறுமதியான பல்வேறு வாழ்வாதார உதவிகளை கொழும்பு லயன்ஸ் கழகம் வழங்கியது.





கொழும்பு 306-சீ/2 மாவட்ட லயன்ஸ் கழகம் கடந்த டிசம்பர் மாதம் 31ஆம் திகதி இப்பரிசுகளை திகன பிரதேசத்திலுள்ள ராஜவாலுகாராம விகாரையில் வைத்து வழங்கியது. இதில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட தென்னை மரக்கன்றுகள், கர்ப்பிணித் தாய்மாருக்கான பிரசவகால அத்தியாவசிய உபகரணத் தொகுதிகள், முதியோருக்கான சக்கர நாற்காலிகள், ஊன்றுகோல்கள், தையல் இயந்திரம், பாடசாலை மாணவர்களுக்கான உபகரணத் தொகுதிகள் மற்றும் புத்தகப்பைகள், சிறுவர்களுக்கான வங்கி சேமிப்பு புத்தகங்கள், வசதி குறைந்த குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு உலருணவுப் பொருட்கள் அடங்கலாக மொத்தம் 25 இலட்சம் ரூபாவுக்கும் மேற்பட்ட பொருட்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. இதன்போது மூவின மக்களுக்கும் உதவிப் பொருட்கள் பகிர்ந்தளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

306-சீ/2 மாவட்ட லயன்ஸ் கழக ஆளுநர் சிங்காதிபதி பெனார்ட் கம்லத், திகன பிரதேச லயன்ஸ் கழகத் தலைவர் பி.என்.வீரபாகு, அவரது பாரியார் சாவித்திரி வீரபாகு மற்றும் திருமதி இம்ரான் உட்பட பலர் கலந்துகொண்டு அவற்றை கையளித்தனர்.

# வறுமை ஒழிப்பு வேலைத்திட்டம் வேண்டும்

## வீட்டுப் பணியாளர் சங்கத்தலைவி கோரிக்கை





(கண்டி நிருபர்)

நாட்டில் வறுமை இருக்கும் வரை வீட்டுப் பணியாளர் தொழிலை ஒழிக்க முடியாது. எனவே வறுமை ஒழிப்பு வேலைத்திட்டங்கள் மிகவும் அவசியம் என வீட்டுப் பணியாளர் சங்கத்தலைவி சத்யவாணி சரசகோபால் தெரிவித்தார். வீட்டுப் பணியாளர் தொழிற்சங்கத்தின் 9ஆவது தேசிய மாநாடு கண்டி கெப்பிட்டி பொல நினைவு மண்டபத்தில் இடம்பெற்றது. அங்கு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வீட்டுப் பணிகளில் ஈடுபடும் தொழிலாளர்கள் வேலைக்காரி என்ற இழிச்சொல்லில் இருந்து மீட்சி பெற வேண்டும். எமது சங்கம் அதற்காகப் பாடுபடுகிறது. அவர்களுக்கு உரிய கௌரவம் வழங்கப்பட வேண்டும். வீட்டுப்பணியில் ஈடுபடுவோரது உரிமைகள் வழங்கப்பட்டால் மட்டுமே அது கௌரவமான ஒரு தொழிலாக மாற முடியும். உலகத்தில் அன்றாட ஜீவனோபாயத்திற்காக மேற்கொள்ளப்படும் எத்தனையோ தொழில்கள் உண்டு. அதில் ஒன்றாகவே வீட்டுப்பணியையும் கருத வேண்டும். வறுமையினாலேயே இதனைச் செய்கிறார்கள்.

வீட்டுவேலைத் தொழில் என்றதும் மலையகத்திற்கு மட்டும் எல்லைப் படுத்தப்பட்ட ஒன்று என்று சிலர் நினைக்கிறார்கள். ஆனால் அப்படி இல்லை. இன்று எமது சங்கத்தை எடுத்துக் கொண்டால் நாடளாவிய ரீதியில் மூவின மக்களும் அதில் அங்கம் வகிக்கின்றனர். வெளிநாடுகளுக்கு வீட்டுப் பணிக்காக அதிகமானவர்கள் சென்றுள்ளனர். அவர்களுக்கு அநீதிகள் ஏற்படும்போது அவர்களுக்காக குரல் கொடுக்க அமைப்புகள் தேவைப்பட்டன. அந்த வகையில் எமது சங்கத்தை நாடி வருவோர் எண்ணிக்கை அதிகரித்துள்ளதுடன் வவுனியா, மட்டக்களப்பு, காத்தான்குடி, அம்பாறை, கொழும்பு உட்பட மலையகப் பகுதி பெண்கள் பலரும் அங்கத்துவம் பெற்றுள்ளனர். கொழும்பை சூழவுள்ள பெரும்பாலான தொழிலாளர்கள் தமது உரிமைகளை எமது சங்கத்தினூடாக வென்றெடுத்துள்ளனர் என்றார்.

# முன்னாள் அமைச்சர் மகேஸ்வரனின் 15ஆவது ஆண்டு நினைவேந்தல்







(யாழ். நிருபர்)

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தி. மகேஸ்வரனின் 15ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று முன்தினம் (01) வட்டுக்கோட்டை ஐக்கிய தேசியக் கட்சியின் அலுவலகத்தில் நடைபெற்றது.

அதன்போது அன்னாரின் திருவுருவப் படத்திற்கு மலர்மாலை அணிவித்து, மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் வட்டுக்கோட்டை ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளர் விஜிமருதன், மதகுருமார், கட்சியின் ஆதரவாளர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். 2008ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி கொழும்பு பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்தில் வைத்து முன்னாள் அமைச்சர் தி. மகேஸ்வரனும் அவரது பாதுகாவலரும் சுட்டுக் கொலைசெய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# யாழ். மாவட்ட செயலகத்தில் 2023ஆம் ஆண்டுக்கான கடமைகள் ஆரம்பம்

(யாழ். நிருபர்)

2023ஆம் ஆண்டுக்கான கடமைகளை ஆரம்பிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் (01) யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

நிகழ்வின் ஆரம்பத்தில் இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் தேசியக் கொடி ஏற்றப்பட்டு, தேசிய கீதமும் இசைக்கப்பட்டது.


தொடர்ந்து சத்தியப்பிரமாணம் இடம்பெற்று மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நிகழ்வுகளும் இடம்பெற்றன.


இந்நிகழ்வில் யாழ். மாவட்ட பதில் அரசாங்க அதிபர் ம.பிரதீபன், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) எஸ்.முரளிதரன், உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.





# சந்நிதியான் ஆச்சிரமத்தில் ஆறுமுகநாவலரின் 200ஆவது ஆண்டு நிறைவு விழா





(நெல்லியடி நிருபர்)

வடமராட்சி தொண்டைமானாறு செல்வச் சந்நிதியான் ஆச்சிரமத்தில் ஆறுமுகநாவலரின் 200ஆவது ஆண்டு நிறைவு விழா நேற்று முன்தினம் (01) மிகச் சிறப்பாக இடம்பெற்றது.

முன்னதாக நாவலர் பெருமானின் திருவுருவம் ஆ. சிவநாதன் தலைமையில் செல்வச்சந்நிதியான் ஆலயத்திலிருந்து பல்லக்கில் ஊர்வலமாக செல்வச் சந்நிதியான் ஆச்சிரமம் வரை எடுத்துவரப்பட்டு அங்கு ஆசியுரையை சிவஸ்ரீ சோ. தண்டபாணிக தேசிகர் சுவாமிகள் நிகழ்த்தினார்.

அருளுரையை ஸ்ரீசோமசுந்தர பரமாச்சாரியார் - 2ஆவது மகா சந்நிதானம் நிகழ்த்தினார்.

ஆறுமுகநாவலரின் தமிழ்ப் பணி, சைவப் பணி தொடர்பாக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் வேல் நந்தகுமார், சைவப்புலவர் ச. முகுந்தன் ஆகியோரும் நினைவுரை நிகழ்த்தினர்.

தொடர்ந்து கந்த. சத்தியதாஸன் குழுவினரால் வில்லுப்பாட்டு, பண்ணிசை என்பன நிகழ்த்தப்பட்டதுடன் பாமாலையை என்.எஸ். பிரதீபன் குழுவினர் நிகழ்த்தினர். அதனைத் தொடர்ந்து அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன.

இதேவேளை, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் நினைவு மலர் வெளியீடும் இடம்பெற்றது. இதில் அறிமுகவுரையை இரா. செல்வவடிவேல் நிகழ்த்தினார். மதிப்பீட்டுரையை மு.கௌரிகாந்தன் நிகழ்த்தினார்.

படுகொலை செய்யப்பட்ட முன்னாள் இந்து கலாசார அமைச்சர் தியாகராசா மகேஸ்வரன் ஞாபகார்த்தமாக தரம் - 01 தொடக்கம் உயர்தரம் வரையான மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் ஆன்மீகத் தலைவர்கள், கல்வியலாளர்கள், அடியார்கள், சந்நிதியான் ஆச்சிரம சுவாமிகள் கலாநிதி மோகனதாஸ் மற்றும் தொண்டர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# யாழ். போதனாவுக்கு ஒருதொகை மருந்துப் பொருட்கள் கையளிப்பு

(யாழ். நிருபர்)

கோண்டாவில் ராஜேஸ்வரி அறக்கட்டளை நிலையத்தினரால் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு ஒருதொகுதி மருந்துப்பொருட்கள் கையளிக்கப்பட்டன.



யாழ்ப்பாண நீரிழிவு கழகத்தின் வேண்டுகோளுக்கிணங்க, கோண்டாவில் ராஜேஸ்வரி அறக்கட்டளை நிலையத்தினரால் நேற்று ஒரு இலட்சத்து 20 ஆயிரம் ரூபா பெறுமதியான நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான இன்சுலின் மருந்துப் பொருட்கள் கோண்டாவில் அறக்கட்டளை நிலையத்தினரால் யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளரிடம் கையளிக்கப்பட்டது.

மிகவும் விலை உயர்ந்த இன்சுலின் மருந்து என்பதால் அரச வைத்தியசாலைகளில் இலவசமாக வழங்கப்படுவதில்லை. இதன் காரணமாக பொதுமக்களின் பங்களிப்புடன் வழங்கப்படும் நிலையில் அறக்கட்டளை நிலையத்தினரால் நேற்று இன்சுலின் மருந்து வைத்தியசாலை பணிப்பாளரிடம் கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் ராஜேஸ்வரி அறக்கட்டளை நிலையத்தின் தலைவர் மற்றும் யாழ்ப்பாண நீரிழிவு கழகத்தின் உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.





நீண்ட காலமாக மூடிய நிலையில் காணப்பட்ட சாவகச்சேரி பிரதேச சபையின் எழுதுமட்டுவாழ் பொதுச்சந்தை நேற்று முன்தினம் (01) மீள பயன்பாட்டிற்காக சாவகச்சேரி பிரதேச சபையின் உப தவிசாளர் மயூரன் மற்றும் பிரதேச சபையின் எழுதுமட்டுவாழ் வட்டார உறுப்பினர் தெய்வேந்திரம்பிள்ளை ஆகியோரால் திறந்துவைக்கப்பட்டது.

(சாவகச்சேரி நிருபர்)

# கல்லுண்டாயில் வாள்வெட்டு; ஒருவர் படுகாயம்

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் கல்லுண்டாய் பகுதியில் நேற்று முன்தினம் (01) இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவத்தில் 34 வயதுடைய நபர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கல்லுண்டாய் பகுதியிலுள்ள வைரவர் ஆலயத்திற்கு அருகிலுள்ள வீடொன்றில் வசிக்கும் குறித்த நபர், சம்பவதினம் இரவு வீட்டின் வெளியே நின்றுகொண்டிருந்தவேளை முச்சக்கர வண்டி மற்றும் மோட்டார்சைக்கிளில் வந்த ஆறுக்கும் மேற்பட்டவர்கள் உள்ளடங்கிய வன்முறைக் கும்பலொன்று அவர் மீது சரமாரியாக வாள்வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டுவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளது.

சம்பவத்தில் காயமடைந்த நபரை அயலவர்கள் மீட்டு, அம்பியூலன்ஸ் மூலம் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டுசென்று சிகிச்சைக்காக சேர்த்துள்ளனர். சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

# வளமான இலங்கைக்காக ஒன்றாக அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்

## புத்தாண்டில் பணியைத் தொடங்கிய அனைத்து அரச ஊழியர்களுக்கும் ஜனாதிபதி அழைப்பு





''இலங்கையின் பொருளாதாரத்தின் மிக முக்கிய வருடமான 2023ஆம் ஆண்டில், தமது பொறுப்புகளை எவரும் தட்டிக்கழிக்கக் கூடாது'' - என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

புதிய வருடத்தில் வளமான இலங்கைக்காக ஒன்றிணைந்து தம்மை அர்ப்பணிக்குமாறு அனைத்து அரச ஊழியர்களுக்கும் ஜனாதிபதி அழைப்பு விடுத்தார்.

2023 புத்தாண்டில் ஜனாதிபதி அலுவலக ஊழியர்களுடன் இணைந்து நேற்று (02) காலை தமது கடமைகளை ஆரம்பிக்கும் நிகழ்வில் ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க புத்தாண்டில் கடமைகளை ஆரம்பிக்க முன்னர், தேசியக் கொடியை ஏற்றிவைத்தார். இதன்பின்னர் அனைத்து ஊழியர்களும் ஒன்றிணைந்து, அரச பணிக்கான சத்தியப்பிரமாணத்தை செய்துகொண்டனர்.

பின்னர் அனைத்து ஊழியர்களுடனும் ஜனாதிபதி தேநீர் விருந்துபசாரத்தில் இணைந்து கொண்டார்.

ஜனாதிபதி பணிக்குழாமின் ஊழியர்களுக்கு ஜனாதிபதி புத்தாண்டு வாழ்த்துகளையும் தெரிவித்தார்.

புத்தாண்டில் பணிகளை ஆரம்பிக்க முன்னர் உரையாற்றிய ஜனாதிபதி,

''அனைவருக்கும் எனது புத்தாண்டு வாழ்த்துகள்.

ஐந்தரை மாதங்களுக்கு முன்னர் இந்த அலுவலகத்தில் ஒரு வரலாற்றுப் பணியை நாங்கள் ஆரம்பித்தோம். அரசாங்கம் வீழ்ச்சியடைந்து, பொருளாதாரம் உடைந்து வீழ்ந்திருந்த சந்தர்ப்பத்தில் நாட்டை வழமைக்குக் கொண்டுவர இந்த ஐந்தரை மாதங்களில் நடவடிக்கை எடுத்தோம். நமது பொருளாதாரப் பிரச்சினைகள் அனைத்தும் முழுமையாக தீர்க்கப்படவில்லை. ஆனால், இன்று தேவைக்கேற்ப எரிபொருள், எரிவாயு, உணவுப் பொருட்கள், உரங்கள் ஆகியவற்றை வழங்கும் திறனைப் பெற்றுள்ளோம்.

இந்த ஐந்தரை மாதங்களில் இதற்காக நீங்கள் அனைவரும் வழங்கிய ஆதரவுக்கு எனது நன்றிகள். எங்கள் திட்டம் இத்துடன் முடிந்துவிடவில்லை. 2023ஆம் ஆண்டு மிக முக்கியமானது. நாட்டின் கடன் மறுசீரமைப்புத் திட்டத்தை செயல்படுத்தி, நாட்டை கடன் சுமையிலிருந்து விடுவித்து நாம் முன்னேற வேண்டும்.

நவீன உலகத்துடன் போட்டியிடக்கூடிய பொருளாதாரத்தை நாம் கட்டியெழுப்ப வேண்டும். நாட்டின் அரசியல் முறைமையில் மாற்றம் தேவை என்று பெரும்பாலானோர் கருதுகின்றனர். இந்த இரண்டு விடயங்களையும் நாம் நிறைவேற்ற வேண்டும்.

தற்போதுள்ள அரசியல் முறைமையில் உள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான புதிய வழிமுறைகளைக் கண்டறிய வேண்டும். இதற்காக கடந்த ஆண்டைவிட நாம் அனைவரும் ஒன்றிணைந்து பணியாற்ற வேண்டும்.

இந்த அரசாங்கத்தை ஒரே இயந்திரமாகவே பார்க்கிறோம். அமைச்சுகளுக்கு பல திட்டங்கள் தனியாக பிரிக்கப்படவில்லை. வேலைத்திட்டங்கள் அனைத்தும் ஒரு இயந்திரத்தின் துணைப் பகுதிகளாக முன்னெடுக்கப்படுகின்றன. எனவே, யாருக்கும் இடையில் போட்டியோ, கயிறிழுத்தலோ இருக்கக்கூடாது.

தங்களின் பொறுப்புகளை வரையறுத்துக் கொள்ளக் கூடாது. நாட்டின் அடிப்படைக் கொள்கைகளை நடைமுறைப்படுத்த நீங்கள் அனைவரும் கட்டுப்பட வேண்டும். இந்தப் பணிகளின்போது ஜனாதிபதி அலுவலகம் மையப் பகுதியாக இருக்கும். அமைச்சரவை மற்றும் பிரதமர் அலுவலகம் ஆகியவற்றினால் இந்தப் பணிகள் முன்னெடுக்கப்படும்.

உங்களின் பணிகள் வாரத்தில் 05 நாட்களுக்கோ, நாளொன்றுக்கு 08 மணித்தியாலங்களுக்கோ மட்டுப்படுத்தப்படக் கூடாது. அனைவரும் அர்ப்பணிப்புடன் பணியாற்ற வேண்டும். 2023ஆம் ஆண்டு இறுதிக்குள் இந்த நாட்டில் சாதாரண சூழ்நிலையை உருவாக்கி, உங்கள் அனைவரின் ஆதரவுடன் இந்த நாட்டை முன்னோக்கி வழிநடத்த நான் எதிர்பார்க்கின்றேன்''- என்று தெரிவித்தார்.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, ஜனாதிபதி அலுவலகத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் உள்ளிட்ட அனைத்து ஊழியர்களும் கலந்துகொண்டனர்.







# வைத்தியர் தாக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பதுளையில் அமைதிப் போராட்டம்

பதுளை பொது வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவின் சிரேஷ்ட வைத்திய அதிகாரி மற்றும் அரசாங்க வைத்திய பிரதிச் செயலாளர் மீது கும்பல் தாக்குதல் நடத்தியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பதுளை பொது வைத்தியசாலையின் வைத்தியர்கள் மற்றும் ஊழியர்கள் நேற்று (2) பிற்பகல் பதுளை பொது வைத்தியசாலைக்கு முன்பாக அமைதிவழிப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.



தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டதாகக் கூறப்படும் 18 வயது யுவதியை நேற்று முன்தினம் (01) மாலை பதுளை பொது வைத்தியசாலைக்குக் கொண்டுவரும்போது ஏற்கனவே உயிரிழந்திருந்த நிலையில் வைத்தியசாலைக்கு தாமதமாக கொண்டு வரப்பட்டதால் உயிரைக் காப்பாற்ற முடியவில்லை என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் தெரியப்படுத்தியதையடுத்து, ஆத்திரமடைந்த சிலர் வைத்தியசாலையில் வன்முறையில் ஈடுபட்டதாகவும், அவர்கள் தம்மைத் தாக்கியதாகவும் வைத்தியர் பாலித ராஜபக்ஷ தெரிவித்தார்.

இந்த வைத்தியர் பொலிஸாருக்கு செய்த முறைப்பாட்டின் பிரகாரம் சந்தேக நபர்கள் மூவர் கைதுசெய்யப்பட்டதாக பதுளை பொலிஸார் தெரிவித்தனர்.

# பெண் செயற்பாட்டாளர்களுக்கான சட்ட ஏற்பாடுகள் விளக்கப் பயிற்சி

**(மஸ்கெலியா நிருபர்.செ.தி.பெருமாள் )**

2023ஆம் ஆண்டில் பெண்கள் மற்றும் இளைஞர்களுக்கான இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் கொள்கையாக்கம் வரைபுக்குள்ளாக்கப்பட்டு வருகின்ற நிலையில், எனது ஏற்பாட்டில் சர்வதேச பொது சேவைகளுக்கான சம்மேளனத்தின் அனுசரணையில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் மற்றும் அவற்றை எவ்வாறு எதிர்கொள்வது என்ற தொனிப்பொருளின் கீழ் 150 பெண் செயற்பாட்டாளர்கள், தலைவிகள், பொறுப்பாளர்களுக்கு சட்ட ஏற்பாடுகள் மற்றும் அது தொடர்பான கட்டமைப்பு ரீதியான விளக்க பயிற்சி பட்டறை காங்கிரஸ் கேட்பார் கூடத்தில் நடைபெற்றது.



இந்நிகழ்வின் பிரதம அதிதிகளாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளர் நாடாளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஸ்வரன், பிரதித் தலைவர் மற்றும் காங்கிரஸின் மகளிர் பிரிவின் பொறுப்பாளருமான அனுசியா சிவராஜா ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள்.

மேலும் இந்நிகழ்வில் மஸ்கெலியா பிரதேச சபையின் தவிசாளர் திருமதி கோவிந்தன் செண்பகம், இளைஞர் அணி பொதுச் செயலாளர் அர்ஜுன் ஜெயராஜ், பெண்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதேச சபை உறுப்பினர்களும், காங்கிரஸின் பணிமனை பணிப்பாளர்களும் மகளிர் அமைப்பாளர்களும் கலந்து சிறப்பித்தனர்.





# திருகோணமலையில் படுகொலை செய்யப்பட்ட மாணவர்களின் 17ஆம் ஆண்டு நினைவேந்தல் யாழில்

**(யாழ் நிருபர்)**

திருகோணமலையில் விசேட அதிரடிப் படையினரால் சுட்டுப் படுகொலைசெய்யப்பட்ட ஐந்து தமிழ் மாணவர்களின் 17ஆம் ஆண்டு நினைவேந்தல் நேற்று திங்கட்கிழமை வல்வெட்டித்துறையில் எம்.கே.சிவாஜிலிங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.



இதன்போது ஐந்து மாணவர்களின் உருவப் படத்திற்கு சுடரேற்றி அஞ்சலிக்கப்பட்டது.

சுடரேற்றிய பின்னர், தமிழ் இனப் படுகொலை உட்பட்ட சர்வதேச குற்றங்களுக்கான குற்றவாளிகளை சர்வதேச குற்றவியல் நீதி மன்றத்தில் நிறுத்தி நீதியைப் பெறத் தொடர்ந்து போராடுவோம் என தெரிவித்த எம்.கே.சிவாஜிலிங்கம், இலங்கைத் தீவின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வாக தமிழ்த் தேசிய இனம் தனக்கே உரித்தான சுய நிர்ணய உரிமையின் அடிப்படையில் சுதந்திரமா? சுயாட்சியா? என்ற பொதுசன வாக்கெடுப்பு ஒன்றை நடத்த முன்வருமாறு சர்வதேச சமூகத்துக்கு அழைப்பு விடுக்கிறோம் என்றார்.

கடந்த 2006ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2ஆம் திகதி மாலை திருகோணமலை கடற்கரை பகுதியில் பொழுதுபோக்குக்காக கூடியிருந்த ஐந்து மாணவர்கள் விசேட அதிரடிப் படையினரால் அழைத்துச் செல்லப்பட்டு காந்தி சிலை சுற்று வட்டத்திற்கு அருகாமையில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டனர்.

# புதிய பரீட்சைகள் ஆணையாளர் நாயகமாக அஜித் ஜயசுந்தர நேற்று பதவியேற்பு



புதிய பரீட்சைகள் ஆணையாளர் நாயகமாக அமித் ஜயசுந்தர நேற்று (2) காலை பதவியேற்றார்.

முன்னாள் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எல்.எம்.டி.தர்மசேன ஓய்வுபெற்றதையடுத்து, புதிய பரீட்சைகள் ஆணையாளர் நாயகமாக அமித் ஜயசுந்தர நியமிக்கப்பட்டார். இவர் பரீட்சைகள் திணைக்களத்தின் 21ஆவது பரீட்சை ஆணையாளர் நாயகமாவார்.

இவர் இதற்கு முன்னர் பரீட்சைகள் திணைக்களத்தில் பரீட்சைகள் ஆணையாளராக (கட்டுப்பாடு) பணியாற்றியுள்ளார்.

# யாழில் கடைக்கு வந்த 10 வயதுச் சிறுமியை துஷ்பிரயோகம் செய்ய முயன்ற முதியவர் இளைஞர்களால் நையப்புடைப்பு

யாழில் 10 வயதுச் சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்ய முயன்ற 72 வயது முதியவர் பிரதேச இளைஞர்களால் நையப்புடைக்கப்பட்டு, பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

மானிப்பாய் பொலிஸ் பிரிவில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

அந்தப் பகுதியில் பலசரக்குக் கடையொன்றை நடத்திவரும் முதியவரே கைவரிசையை காண்பிக்க முயன்றுள்ளார்.

பொருள் வாங்க வந்த 10 வயதுச் சிறுமியுடனேயே அவர் அத்துமீறியுள்ளார்.

கடையில் யாருமில்லாத சமயத்தில் தனியாக வந்த சிறுமியை கடைக்குள் தள்ளிச் சென்று பாலியல் துஷ்பிரயோகம் செய்ய முயன்றபோது சிறுமி கூக்குரலிட்டுள்ளார்.

அந்தப் பகுதியால் சென்ற இளைஞர்கள், சிறுமியின் அவலக்குரலை கேட்டு, கடைக்குள் சென்று பார்த்தபோது, முதியவர் எக்குத்தப்பான கோலத்தில் நின்றுள்ளார்.

இதையடுத்து, முதியவரை அடித்து துவைத்த இளைஞர்கள், மானிப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.





**மாத்தளை மாவட்டத்திலுள்ள பெருந்தோட்டப் பகுதி பெண்களுக்கு அவுஸ்திரேலிய அரசின் நன்கொடைகளான சுகாதார பாதுகாப்பு உபகரணங்ளை இளைஞர் விவகார விளையாட்டுத்துறை இராஜாங்க அமைச்சர் ரோஹன திசாநாயக்க வழங்கினார். இரத்தோட்டையில் இடம்பெற்ற இவ்வைபவத்தில், கந்தேநுவர, ஹுனுகல, இரத்தோட்டை, பிட்டகந்த முதலான பகுதிகளைச் சேர்ந்த 200இற்கும் மேற்பட்ட பெருந்தோட்டப் பெண்களுக்கு மேற்படி அன்பளிப்புகள் கையளிக்கப்பட்டன. (கண்டி நிருபர்)**

# புத்தாண்டு நள்ளிரவில் வீடுடைத்து திருட்டு

## வவுனியாவில் சம்பவம்

வவுனியா வைரவப்புளியங்குளம் பகுதியில் புத்தாண்டு தினமான நேற்றுமுன்தினம் (01.01.2022) இரவு வீடுடைத்து திருட்டுச் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது

வவுனியா முதலாம் குறுக்குத்தெருவில் அமைந்துள்ள பிரபல வர்த்தக நிலையமொன்றின் உரிமையாளரின் வீடான வைரவப் புளியங்குளம் வீட்டில் இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

தனிப்பட்ட தேவையின் நிமித்தம் வீட்டிலுள்ள அனைவரும் கொழும்புக்கு சென்றிருந்த சமயத்தில் வீட்டின் பின்பக்கமாக சென்ற திருடர்கள் வீட்டின் கதவினை உடைத்து பணம் மற்றும் நகை ஆகியவற்றினை எடுத்துச் சென்றுள்ளனர். நேற்று காலை வீட்டினை திறந்துபோது வீடு உடைக்கப்பட்டு பொருட்கள் களவாடப்பட்டமை தெரிய வந்ததையடுத்து வீட்டின் உரிமையாளரினால் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டது

குறித்த திருட்டுச்சம்பவத்தின்போது 6 1/2 பவுண் நகை மற்றும் இரண்டு இலட்சம் ரூபா பணம் களவாடப்பட்டுள்ளதாக வீட்டின் உரிமையாளர் தெரிவித்துள்ளமையுடன் மேலதிக விசாரணைகளை வவுனியா குற்றத்தடுப்புப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# யாழ். மாவட்டத்தில் விசேட நுளம்பு கட்டுப்பாட்டு செயற்றிட்டத்தை முன்னெடுக்க நடவடிக்கை

**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவிப்பு**

ஜனவரி மாதம் 3ஆம் திகதியான இன்றுமுதல் 5ஆம் திகதிவரை தொடர்ச்சியாக மூன்று நாட்கள் யாழ். மாவட்டத்தில் விசேட நுளம்பு கட்டுப்பாட்டு செயற்றிட்டத்தை முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் ஊடகங்களுக்கு அனுப்பியுள்ள செய்திக் குறிப்பிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த செய்திக் குறிப்பில், யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த சில மாதங்களாக டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதுடன், அதிக மரணங்களும் பதிவாகின்றன.

யாழ். மாவட்டத்தில் 2022இல் இதுவரையான காலப்பகுதியில் 3,421 நோயாளர்கள் உறுதி செய்யப்பட்டதுடன், ஒன்பது மரணங்களும் பதிவாகியுள்ளன.

மேலும் பருவப்பெயர்ச்சி மழையின் பின் அதாவது 2022ஆம் ஆண்டின் ஒக்டோபர், நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களிலேயே யாழ். மாவட்டத்தில் இனங்காணப்பட்டுள்ள டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளது.

ஒக்டோபர் மாதத்தில் 231 டெங்கு நோயாளர்களும், நவம்பர் மாதத்தில் 306 டெங்கு நோயாளர்களும் மற்றும் டிசம்பர் மாதத்தில் 633 டெங்கு நோயாளர்களும் இனங்காணப்பட்டுள்ளனர்.

பருவப்பெயர்ச்சி மழையுடன் ஏற்பட்டுள்ள இந்த டெங்கு பெருந்தொற்றைத் தடுப்பதற்கு



வாராந்தம் உறுதிசெய்யப்படும் டெங்கு தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட வேண்டும். எனவே, அனைத்து பிரதேசங்களிலும் நுளம்புகள் பெருகக்கூடிய இடங்களை டெங்கு பரவுவதற்கான அதிக ஆபத்துள்ள பிரதேசங்களாகக் கருத்திற்கொண்டு எதுவித காலதாமதமுமின்றி சமூக பங்களிப்புடன் நுளம்புகள் உருவாகும் மூலங்களை அழிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படல் வேண்டும்.

எனவே, இதனை கருத்திற்கொண்டு ஜனவரி மாதம் 3ஆம் திகதிமுதல் 5ஆம் திகதிவரை தொடர்ச்சியாக மூன்று நாட்கள் யாழ். மாவட்டத்தில் விசேட நுளம்பு கட்டுப்பாட்டு செயற்றிட்டத்தை முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்நாட்களில் சுகாதார உத்தியோகத்தர்கள், பாதுகாப்புப் படையினர். பொலிஸ், கிராம உத்தியோகத்தர்கள், உள்ளூராட்சி மன்ற உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் அடங்கிய குழுக்கள் கிராம உத்தியோகத்தர் பிரிவுவாரியாக உள்ள அரச தனியார் நிறுவனங்கள், மத ஸ்தலங்கள், பாடசாலைகள், உயர் கல்வி நிறுவனங்கள், வீடுகள், தொழிற்சாலைகள், கட்டட நிர்மாணங்கள் நடைபெறும் இடங்கள் மற்றும் மீன்பிடி துறைமுகங்கள் என்பனவற்றிற்கு நுளம்புகள் பெருகக்கூடிய ஆபத்துள்ள இடங்களை அடையாளம் காணும் நோக்கத்துடன் பரிசோதிப்பதற்காக வருகை தருவர்.

எனவே, உங்கள் வீட்டின் உட்பகுதிகளிலும், வெளிச் சுற்றாடலிலும் டெங்கு நுளம்புகள் பெருகும் இடங்கள் உள்ளனவா என்பதனை கிரமமாக பரிசோதனை செய்வதுடன், அவற்றை அப்புறப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கவும் பாடசாலைகளின் அதிபர்கள் மற்றும் அரச தனியார் நிறுவனங்களின் பொறுப்பதிகாரிகள் தமது நிறுவனங்களில் கூட்டு முயற்சியாக சிரமதானப் பணிகளை முன்னெடுக்கவும் மேலும் கைவிடப்பட்ட காணிகள், வீடுகள் என்பனவற்றின் உரிமையாளர்கள் அவற்றை துப்புரவாக பேணுமாறு கேட்டுக் கொள்ளப்படுவதுடன், அவ்வாறான இடங்களில் டெங்கு நுளம்புகள் பெருகக்கூடிய ஆபத்து நிலைகள், கள தரிசிப்புக்கு வருகை தரும் உத்தியோகத்தர்களால் அடையாளம் காணப் படுமாயின் உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

டெங்கு நோயிலிருந்தும் அதனால் ஏற்படக் கூடிய மரணங்களில் இருந்தும் எம்மையும் எமது சமூகத்தையும் பாதுகாக்க ஒன்றிணைவோம் – என்றுள்ளது.





மலையக மக்கள் முன்னணியின் முன்னாள் தலைவரும் முன்னாள் அமைச்சருமான அமரர் பி.சந்திரசேகரனின் 13ஆவது சிரார்த்த தினம் தலவாக்கலை கதிரேசன் ஆலய மண்டபத்தில் ஐக்கிய மக்கள் முன்னணி மற்றும் ஐக்கிய தொழிலாளர் முன்னணியின் தலைவரும் கல்வி இராஜாங்க அமைச்சருமான அருணாச்சலம் அரவிந்தகுமார் தலைமையில் நேற்று முன் தினம் (1) அனுஷ்டிக்கப்பட்டது.

(தலவாக்கலை நிருபர்)



சுபீட்சமான நாட்டைக் கட்டியெழுப்பும் கொள்கைப் பிரகடனத்திற்கு அமைய சப்ரகமுவ மாகாண சபையில் கடமையாற்றும் அரச சேவையாளர்கள் தமது கடமைச் செயற்பாடுகளை உறுதிப்படுத்தும் நிகழ்வு நேற்று (02) சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தலைமையில் சப்ரகமுவ மாகாண சபையின் கட்டடத் தொகுதியில் இடம்பெற்றது. இதன்போது சர்வமதத் தலைவர்களின் பிரார்த்தனைகளும் இடம்பெற்றதுடன், அரச சேவையாளர்கள் தமது கடமைச் செயற்பாடுகளை உறுதிப்பிரமாணம் செய்துகொள்ளும் நிகழ்வும் இடம்பெற்றது. இந்நிகழ்வில் சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ, சப்ரகமுவ மாகாண சபையின் தலைவர் காஞ்சன ஜயரத்ன உட்பட அரச அதிகாரிகள், அரச உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# பண்டிதர் வீரகத்தி நூற்றாண்டு நினைவு நிகழ்வு கரவெட்டியில்



இலக்கண இலக்கியப் பேராசான் பண்டிதர் க.வீரகத்தியின் நூற்றாண்டு நிறைவு நிகழ்வு வடமராட்சி கரவெட்டி சாமியன் அரசடி தச்சை ஐங்கரன் அறநெறிப் பாடசாலை மண்டபத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை ( 08) பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவிருக்கிறது.

கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவர் உபாலி பொன்னம்பலம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் நினைவுப் பேருரைகளை பேராசிரியர் அ.சண்முகதாஸ், பேராசிரியர் சி.சிவலிங்ராசா, ஓய்வுநிலை அதிபர் கி.நடராசா ஆகியோர் நிகழ்த்துவர்.

தலைமையுரையை ஓய்வுநிலை அதிபர் இ.இராகவனும் தொடக்கவுரையை யாழ்ப்பாண மாவட்ட சிரேஷ்ட சமுர்த்தி முகாமையாளர் ஆ.இரகுநாதனும் சிறப்புரைகளை கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலை விரிவுரையாளர் வேல் நந்தகுமாரும் யாழ்ப்பாண மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரனும் நிகழ்த்துவர். நிகழ்வை பண்டிதர் வீரகத்தி நூற்றாண்டு நிறைவு நினைவுக்குழு ஏற்பாடு செய்திருக்கிறது.





உடப்பு ஸ்ரீ ருக்மணி சத்தியபாமா சமேத ஸ்ரீ பார்த்தசாரதிப் பெருமாள் திரௌபதி அம்மன் ஆலய பிரம்மோற்சவ விழாவில் நேற்று முன்தினம் (1) வேட்டைத் திருவிழா இடம்பெற்றது. இதில் பலர் கலந்துகொண்டனர்.

(உடப்பு செய்தியாளர்)





மதுரங்குளி, கடையாமோட்டை அர்-ரஷீதிய்யா அரபுக் கல்லூரியின் வெள்ளி விழாவும், பட்டமளிப்பு விழாவும் அண்மையில் (டிசம்பர் 31) இடம்பெற்றது. மாணவர்களின் ஊர்வலத்துடன் ஆரம்பமான இந்த நிகழ்வில் 2017ஆம் ஆண்டுமுதல் 2022ஆம் ஆண்டுவரையிலான 32 ஹாபிழ்களுக்கும் 49 அல்–ஆலீம்களுக்கும் இதன்போது பட்டமளிக்கப்பட்டது. இதில் பிரதம அதிதியாக அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபையின் பிரதித் தலைவர் அஷ்ஷெய்க் அப்துல் ஹாலீக் கலந்துகொண்டதுடன், விசேட பேச்சாளராக இந்தியா, திருநெல்வேலி தாரூல் உலூம் ஒஸ்மானிய்யா அரபுக் கல்லூரியின் அதிபர் அஷ்ஷேஹ் எஸ்.எஸ்.ஹைதர் அலி கலந்துகொண்டார். (ரஸீன் ரஸ்மின்)

# மட்டக்களப்பில் 2022இல் மாத்திரம் 180இற்கும் மேற்பட்டோர் தற்கொலை

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் 2022ஆம் ஆண்டில் மட்டும் சுமார் 180இற்கும் மேற்பட்டோர் தற்கொலை செய்திருக்கிறார்கள் - என மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி எம்.எஸ்.எம்.நஸீர் தெரிவித்துள்ளார்.

இதற்கான விழிப்புணர்வுகள் மாவட்டத்தின் எந்தவொரு கிராம மற்றும் நகர மட்டத்தில் நடைபெறாமலிருந்தது உண்மையில் கவலையளிக்கிறது எனவும் தெரிவித்துள்ளார்.

ஒரு மனிதனுக்கு மனதில் ஏற்படும் விரக்தி, பயம், மனச்சோர்வு, கவலை எல்லாம் சேர்ந்து அவனை அழுத்துவதால்தான் தற்கொலைக்கு தூண்டப்படுகிறான்.

தற்கொலை என்ற ஒரு நிமிட எண்ணம் உடனே வருவதில்லை. பிரச்சினைகளை எப்படி கையாள்வது என்று தெரியாமல் குழம்பும்போது யாரும் அரவணைக்க தோள்கொடுக்க இல்லாமல் தனிமையில் வாடும் சமயத்தில் இம்மாதிரியான முடிவை நோக்கி மக்கள் செல்கின்றனர்.

நாளுக்கு நாள் தற்கொலை செய்துகொள்ளும் எண்ணம் மக்கள் மத்தியில் அதிகரித்துக் கொண்டே செல்வதால் அதைத் தடுக்கும் முயற்சியில் நாம் இறங்கவில்லையென்றால் மாவட்டத்தின் நிலைமை என்னாவது?

அரச, அரச சார்பற்ற உயர் அதிகாரிகள் மற்றும் பொலிஸார் இது தொடர்பாக கலந்தாலோசித்து தற்கொலை முயற்சியிலிருந்து மக்களை பாதுகாக்க வழிகோலுங்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பகடைக்காயாக பயன்படுத்தியுள்ளார் பதவியிழந்த ஏறாவூர் தவிசாளர்

## சபையின் உப தவிசாளர் அப்துல் வாசித் சாடல்

(ஏறாவூர் நிருபர்)

ஏறாவூர் நகர சபையில் அண்மையில் பதவியிழந்த தவிசாளர் நழீமினால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பகடைக்காயாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதாக சபையின் உப தவிசாளர் அப்துல் வாசித் தெரிவித்துள்ளார்.

கடந்த நிர்வாகத்தின் வரவு-செலவுத்திட்டம் தோல்வியடைவதை அறிந்துகொண்ட பின்னர் உபதவிசாளர் பதவி தருவதாக பொய்யான வாக்குறுதியளிக்கப்பட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரதிநிதிகளின் வாக்குகள் பெறப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முஸ்லிம் காங்கிரஸ் சார்பிலான முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பினால் ஏறாவூர் நகர சபையில் ஏமாற்றப்பட்டுள்ளதை நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் விளங்கிக்கொள்ளவேண்டுமென அவர் சுட்டிக்காட்டினார். நகர சபையில் நடைபெற்ற விசேட வைபவத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.



உப தவிசாளர் வாசித் இங்கு தொடர்ந்து பேசுகையில்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு உப தவிசாளர் பதவி வழங்கும் நல்லெண்ணம் முன்னாள் தவிசாளர் நழீமின் குழுவிற்கு இருந்திருந்தால் முன்னாள் உபதவிசாளர் றெபுபாசம் பதவி நீக்கப்பட்ட பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு உப தவிசாளர் பதவியை வழங்கும் வாய்ப்பு இருந்தது. ஆனால், அப்போது அவர்கள் மர்ஹும் றியாழையே தெரிவுசெய்தார்கள்.

ஆனால், இப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரதிநிதிகளின் வாக்குகளைப் பெற்றுக்கொள்வதற்காக பகடைக்காயாகப் பயன்படுத்தப்பட்டுள்ளமை வேதனையளிக்கிறது.

எனவே, நல்லெண்ணம் மனதிலிருந்து வரவேண்டுமே தவிர, வார்த்தைகளில் மட்டும் வரக்கூடாது. உள்ளூராட்சி மன்றங்கள் இன்று கலையலாம் அல்லது நாளை கலைக்கப்படலாம். அதைப்பற்றி நாங்கள் கவலைப்படவில்லை. சகோதர இனத்துடன் இணக்கப்பாட்டுடனேயே எமது நிர்வாகம் பயணிக்கும் என்று அவர் உறுதியளித்தார்.

அதுமாத்திரமின்றி முன்னாள் தவிசாளர் நழீம் ஒரு கொந்துராத்துக்காரர். அவர் இச்சபையை தனியார் நிறுவனம்போன்று நிர்வகித்துள்ளார். அவருக்கு உத்தியோகத்தர்களுடன் பேசும் இங்கிதம் தெரியாதென இங்கு பணிபுரியம் ஊழியர்கள் மனந்நொந்து முறையிடுகிறார்கள். தனிப்பட்ட முறையில் அவரிடம் சம்பளம் பெறுகின்ற ஊழியர்களின் பாணியில் செயற்பட்டுள்ளார் என்றார்.

அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைக்கு அமைவாக இந்த ஆண்டிற்கான கடமைச் செயற்பாடுகளை ஆரம்பம் செய்வதற்கான சத்தியப்பிரமாண நிகழ்வு மட்டக்களப்பு ஏறாவூர் நகர சபையிலும் நடைபெற்றது.

ஏறாவூர் நகர சபையின் பிரதித் தவிசாளர் ஐ.அப்துல் வாசித் தலைமையில் சபை முன்றலில் நடைபெற்ற இந்நிகழ்வில் சபை அதிகாரிகள் மற்றும் சகல ஊழியர்களும் பங்கேற்றனர்.

தேசிய கொடியேற்றல் மற்றும் தேசிய கீதம் இசைத்தலுடன் ஆரம்பமான இந்நிகழ்வில் சபையின் செயலாளர் எம்.எச்.எம்.ஹமீம் சத்தியப்பிரமாணத்தை வாசித்தார்.

நாட்டிற்காக உயிர்நீத்த படைவீரர்களுக்காக இந்நிகழ்வில் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. புதுவருட முத்திரையிடப்பட்ட கேக் வெட்டிய மகிழ்வுடன் சபையின் நிர்வாக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

ஏறாவூர் நகர சபையில் இவ்வாண்டிற்கான வரவு- செலவுத் திட்டம் அண்மையில் தோற்கடிக்கப் பட்டதையடுத்து சபையின் தவிசாளர் எம்.எஸ்.நழீம் பதவி இழந்துள்ளதனால் பிரதித் தவிசாளரின் தலைமையில் இவ்வைபவம் நடைபெற்றது.

கிழக்கு
செய்திகள்
eastthamilan@gmail.com

# நாவிதன்வெளி எல்லை நிர்ணயம் தொடர்பில் ஹரீஸ் எம்.பியின் பங்கெடுப்பில் கலந்துரையாடல்



(மாளிகைக்காடு நிருபர்)

நாவிதன்வெளி பிரதேச சபைக்கான எல்லை நிர்ணயத்தின்போது முஸ்லிம்களுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள அநீதிகள் தொடர்பிலும், முஸ்லிம்களுக்கான முறையான எல்லை நிர்ணயம் ஒன்றை அமைக்கவேண்டியதும், வட்டார பிரிப்புகளின் தேவைகள் தொடர்பிலும் ஆராயும் கலந்துரையாடலொன்று முன்னாள் இராஜாங்க அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸின் பங்கெடுப்புடன் மத்திய முகாமில் நேற்று (02) நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலின்போது நாவிதன்வெளி பிரதேச சபைக்கான எல்லை நிர்ணயத்தில் மாவட்ட எல்லை நிர்ணயக் குழுவினர் மேற்கொண்டுள்ள பாராமுகமான செயற்பாடுகள் தொடர்பில் ஆழமாக கலந்துரையாடப்பட்டதுடன், இன்று (03) அரசாங்க அதிபர் காரியாலயத்தில் நடைபெறவுள்ள எல்லை நிர்ணயம் சம்பந்தமான கூட்டத்தில் வலியுறுத்தவேண்டிய விடயங்கள் தொடர்பிலும் ஆராயப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் நாவிதன்வெளி பிரதேச சபை உப தவிசாளர் ஏ.கே.அப்துல் சமட், நாவிதன்வெளி பிரதேச சபை உறுப்பினர் எம்.பி.நவாஸ், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நாவிதன்வெளி அமைப்பாளர் ஏ.சி.எம்.நிஸார், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் நாவிதன்வெளி அமைப்பாளர் எம்.எம்.மஹ்ரூப், மத்தியமுகாம் வட்டார ஸ்ரீல.மு.கா. அமைப்பாளர் நௌபர், அரசியல் கட்சிகளின் முக்கியஸ்தர்கள், பள்ளிவாசல்களின் நிர்வாகிகள், பொது அமைப்புகளின் பிரதானிகள், நாடாளுமன்ற உறுப்பினரின் செயலாளர் நௌபர் ஏ பாவா, இளைஞர்கள் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.



# களுவாஞ்சிக்குடியில் பல்கலைக்கு தெரிவான மாணவர்களுக்குப் பாராட்டு



(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிக்குடி வரலாற்றுக் குழு ஏற்பாடு செய்திருந்த பரிசளிப்பு விழா களுவாஞ்சிக்குடி இராசமாணிக்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

களுவாஞ்சிக்குடி வரலாற்றுக் குழுவின் ஏற்பாட்டாளரும், வரலாற்று ஆசிரியருமான த.ஐங்கரனின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில், கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் மூ.கோபாலரெத்தினம் பிரதம அதிதியாக கலந்துகொண்டிருந்தார்.

மேலும் இந்நிகழ்வில் பட்டிருப்பு வலயக் கல்வி அலுவலகத்தின் வரலாற்றுப் பாடத்திற்கான உதவிக் கல்விப் பணிப்பானர் செ.சுரேஸ் மற்றும் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள் உள்ளிட்ட பலரும் இதன்போது கலந்துகொண்டிருந்தனர்.

# கருவாட்டுக் கூடைக்கும், கஜு, பெற்றோலுக்கும் சோரம்போன கிழக்கு மாகாண கல்விப் பணிமனை

## அக்கரைப்பற்று தவிசாளர் றாஸிக் விளாசல்

(மாளிகைக்காடு நிருபர்)

1987/15ஆம் இலக்க பிரதேச சபை சட்டம் 19 ஆ வின்படி பிரதேச சபை இடப்பரப்பிலுள்ள பாடசாலைகளை திறத்தல், மூடுதல், ஒன்றிணைத்தல், பெயர் சூட்டல், தரம் உயர்த்தல் என்பன பற்றி தோதான அதிகாரிகளுக்கு விதப்புரை செய்யும் அதிகாரம் எங்களுக்கு இருக்கிறது. இவற்றையெல்லாம் மீறியே வீடர் எம்.எச்.எம்.அஷ்ரப் கனிஷ்ட வித்தியாலயம் என்ற பெயரை அஸ்-ஸபா கனிஷ்ட வித்தியாலயம் என்று மாற்றியுள்ளார்கள்.

கிழக்கு மாகாண கல்விப் பணிமனையினர் கருவாட்டுக்கூடைக்கும், கஜு, பெற்றோல் போன்ற பொருட்களுக்கும் சோரம்போய் இந்த விடயத்தில் முறையான நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் ஒருபக்கமாக மாகாண கல்வியதிகாரிகள் செயற்பட்டுள்ளார்கள். இதுவிடயமாக பல தடவைகள் பேசியிருந்தும், நடவடிக்கை எடுக்கக் கோரியிருந்தும் முறையான பொறுப்புக்கூறல்களோ அல்லது பதில்களோ இல்லாமல் அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிமனையினரும் கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளரின் உத்தரவு என்று கூறி கண்களை மூடிக்கொண்டு செயற்படுகிறார்கள் - என அக்கரைப்பற்று பிரதேச சபைத் தவிசாளரும், தேசிய காங்கிரஸ் பிரதி தேசிய அமைப்பாளருமான எம்.ஏ.றாஸிக் மற்றும் அக்கரைப்பற்று பிரதேச சபை முன்னாள் உறுப்பினரும், பள்ளிக்குடியிருப்பு ஜும்மா பள்ளிவாசல் செயலாளருமான அபூஸாலி இல்யாஸ் ஆகியோர் தெரிவித்தனர்.

அக்கரைப்பற்று பள்ளிக்குடியிருப்பு பிரதேசத்தில் அமைந்துள்ள கமு/அக்/அஸ்-ஸபா கனிஷ்ட வித்தியாலய பெயர்மாற்றம் மற்றும் பல சர்ச்சைகள் தொடர்பில் விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு அக்கரைப்பற்று பிரதேச சபை மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை இரவு அக்கரைப்பற்று தவிசாளரின் தலைமையில் அக்கரைப்பற்று பிரதேச சபை உப தவிசாளர், உறுப்பினர்கள், பாடசாலை அதிபர்கள், பிரதேச அமைப்புகள் மற்றும் பொது நிறுவனங்களின் முக்கியஸ்தர்களின் பங்குபற்றலுடன் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்கள்,

அக்கரைப்பற்று பள்ளிக்குடியிருப்பு பிரதேசத்தில் அமைந்துள்ள கமு/அக்/அஸ்-ஸபா கனிஷ்ட வித்தியாலயம் அந்தப் பிரதேசத்திலுள்ள மக்களின் சனத்தொகை பரம்பலுடன் ஒப்பிடுகையில், தேவையில்லாத ஒன்றாக



இருந்தாலும் கூட தலைவர் அஷ்ரபின் பெயரை முன்னிறுத்தி உருவாக்கப்பட்டமையால் அதனை நாங்கள் பொருந்திக்கொண்டோம். இருந்தாலும் 2015ஆம் ஆண்டு காலப்பகுதியில் அந்தப் பாடசாலை உருவாக்கப்பட்டபோது லீடர் அஷ்ரப் கனிஷ்ட வித்தியாலயம் என்று ஆரம்பிக்கப்பட்டது. பின்னாளில் அப்பாடசாலையின் ஸ்தாபகர் என்று கூறப்படுபவரால் அவரது சிரேஷ்ட புதல்வியின் பெயரான ஸபா என்கின்ற பெயர் மாற்றப்பட்டுள்ளது. இது யாராலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

திருட்டுத்தனமாக ஆவணங்களைத் தயாரித்து போலியான ஆவண சமர்ப்பிப்புகளை கல்வி அமைச்சின் காரியாலயங்களுக்கு வழங்கி பாடசாலையின் பெயரை மாற்றியுள்ளார். இதனை ஏற்றுக்கொள்ள முடியாது. றாஸிக் பரீட், பதியுதீன் மஹ்மூத் போன்ற கிழக்குக்கு வெளியே இருந்த முஸ்லிம் அரசியல் தலைவர்களை கௌரவித்த நாங்கள், கிழக்கில் பிறந்து முழு தேசத்திற்கும் தலைமை கொடுத்த தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரபின் பெயரில் பாடசாலை வைத்திருக்க விரும்புவது தவறா? பிரதேச செயலக அதிகாரிகளின் உதவியுடன் கிராம அபிவிருத்தி சங்கத்திற்கு உரிய காணியை பாடசாலைக்கு பெயர் மாற்றியுள்ளதாக அறிகின்றோம். அதுமட்டுமன்றி, அந்தப் பாடசாலையின் ஸ்தாபகராக கூறிக்கொள்பவர் தனது மூத்த மகளின் பெயரை பாடசாலைக்கும், கட்டடங்களுக்கு தனது ஏனைய மக்களின் பெயரையும் வைத்துக்கொண்டு அடாத்தாக பாடசாலையை நிர்வகிக்கிறார். இது அப்பாடசாலை அதிபருக்கும் தர்மசங்கடத்தை உண்டாக்கியுள்ளது.

இந்தப் பிரதேசத்தில் முன்னாள் அமைச்சர் அதாவுல்லா எம்.பி. கல்வி மேம்பாட்டுக்கு செய்த வேலைத் திட்டங்களை எல்லோரும் அறிவர். 90 மாணவர்கள் மட்டுமே உள்ள இப்பாடசாலைக்கு 14 ஆசிரியர்கள், 03 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், 02 சிற்றூழியர்கள், நிறைய பௌதீக வளங்களை போன்றவற்றை கல்வி உயரதிகாரிகள் வழங்கியுள்ளனர். இதனால் அண்மையிலுள்ள ஏனைய பாடசாலைகள் பாதிக்கப்படுகின்றன. இந்த முறைகேடான வளப்பங்கீடுகள் தொடர்பில் நாங்கள் உரிய நடவடிக்கை எடுக்கவுள்ளோம். அரச உயர்மட்டங்களுக்கு இந்தப் பிரச்சினையை கொண்டுசெல்ல தயாராகி வருகின்றோம்.

இந்த பாடசாலை உருவாக்கப்பட்ட நாள்முதல் தொடர்ந்தும் அவரேதான் பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக்குழு உறுப்பினராக இருந்துவருகிறார். இது கல்வியமைச்சின் சுற்றுநிருபத்திற்கும், சட்டத்திற்கும் முரணானது. இவரது போலியான ஆவணங்கள், அடாத்தான நடவடிக்கைகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க தகவலறியும் சட்டத்தின் மூலம் ஆவணங்களை சேகரித்துள்ளோம். இது விடயமாக பல தடவைகள் மாவட்ட அபிவிருத்திக் கூட்டங்களிலும் தலைவர் அதாவுல்லாவும், நாங்களும் பேசியிருக்கிறோம் - என்றனர்.

# மட்டு. பஸ் நிலையத்துக்கு பின்புறமுள்ள வாவி அசுத்தமடையும் அபாயம்



(நிந்தவூர் நிருபர்)

மட்டக்களப்பு பிரதான பஸ் தரிப்பு நிலையத்திற்கு பின்புறமாக வாவியோரமாக தினசரி குப்பைகள் போடப்படுவதனால் வாவி அசுத்தமடைவதுடன், துர்நாற்றமும் வீச ஆரம்பித்துள்ளது.

நாளாந்தம் சேரும் குப்பைகளுடன் வெற்று சாராயப் போத்தல்கள் மற்றும் வெற்று பியர் ரின்கள் என்பனவும் காணப்படுகின்றன.

இவற்றுள் நீர் தேங்கி நிற்கக்கூடிய பொருட்களும் காணப்படுவதால் டெங்கு நுளம்புகள் பெருகக்கூடிய ஆபத்துகளும் ஏற்படலாம் என்ற அச்சமும் பயணிகள் மத்தியில் அதிகரித்துள்ளது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளை இவ்விடயத்தில் கூடிய கவனம் செலுத்துமாறு பயணிகள் கேட்டுள்ளனர்.

# ஜே.வி.பி. - ஐ.தே.க. உறுப்பினர்கள் தேசிய காங்கிரஸில் இணைவு



(மாளிகைக்காடு நிருபர்)

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தூய ஐக்கிய தேசிய கட்சியின் வேட்பாளராக கல்முனை மாநகர சபைத் தேர்தலில் களமிறங்கிய கமால் முகம்மட் அஸ்கர் மற்றும் மக்கள் விடுதலை முன்னணியின் வேட்பாளர் இப்றாகீம் குமாயூன் ஆகியோர் தேசிய காங்கிரஸின் கொள்கைகளை ஏற்று அக்கட்சியில் இணைந்துகொண்டனர்.

தேசிய காங்கிரஸின் கல்முனை அமைப்பாளர் இப்திகர் ரிஷாத் சரீப் முன்னிலையில் தேசிய காங்கிரஸ் மருதமுனை பிரதானியும், கல்முனை மாநகர சபை உறுப்பினருமான சமட் ஹமீடின் அழைப்பின்பேரில் அவர்கள் இருவரும் தேசிய காங்கிரஸில் இணைந்துகொண்டனர்.

தேசிய காங்கிரஸ் தலைவர் முன்னாள் அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம்.அதாவுல்லாவின் சமூகம்சார் முன்னெடுப்புகள், அரசியல் கொள்கைகள், அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பில் திருப்தி கண்டமையே இவர்கள் தேசிய காங்கிரஸில் இணைந்துகொள்ள காரணம்.

இந்த இணைவு நிகழ்வில் தேசிய காங்கிரஸின் மருதமுனை மத்திய குழு மற்றும் இளைஞர் காங்கிரஸ் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

# ஸ்ரீல. முஸ்லிம் காங்கிரஸின் கட்சிக் காரியாலயம் புல்மோட்டையில் திறப்பு

(கந்தளாய் நிருபர்)

திருகோணமலைத் தொகுதி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அமைப்பாளரும் குச்சவெளி பிரதேச சபைத் தலைவருமான ஏ.பி.முபாறக்கின் வேண்டுகோளின் பேரில் திருகோணமலைத் தொகுதிக்கான கட்சிக் காரியாலயம் நேற்று முன்தினம் (01) திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக்கினால் புல்மோட்டையில் திறந்து வைக்கப்பட்டது.



இந்நிகழ்வில் குச்சவெளி பிரதேச சபையின் உறுப்பினர்களான பளீல் அமீன், நஸார், முஜீப், முன்னாள் உறுப்பினர் றஸ்மின், உலமாக்கள், கட்சி முக்கியஸ்தர்கள், ஆசிரியர்கள், பிரதேச பிரமுகர்கள் அனைவரும் கலந்துகொண்டனர்.

# அரசாங்க ஊழியர்களுக்கான புதுவருட முற்பணத்தை 10,000 ரூபாவாக அதிகரிக்குக!

## கிழக்கு கல்வி நிர்வாக அதிகாரிகள் சங்கம் கோரிக்கை

(சாய்ந்தமருது நிருபர்)

புதுவருட விசேட முற்பணமாக அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்படவுள்ள 4,000 ரூபாவைக்கொண்டு என்னதான் செய்ய முடியும் - என்று இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரிகளின் கிழக்கு மாகாண சங்கம் கேள்வி எழுப்பியுள்ளது.

ஆகையால் அரசாங்க ஊழியர்களுக்கான புதுவருட விசேட முற்பணத் தொகையை தற்போதைய பொருளாதார நிலையை கருத்திற்கொண்டு 10,000 ரூபாவாக அதிகரிக்குமாறு அச்சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இக்கோரிக்கையை வலியுறுத்தி நிதியமைச்சு மற்றும் பொது நிர்வாக அமைச்சு என்பவற்றின் செயலாளர்களுக்கு அவசர மகஜர்களை அனுப்பிவைத்திருப்பதாக அதன் செயலாளர் ஏ.எல்.எம்.முக்தார் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்;

அரச ஊழியர்களுக்கு புதுவருட விசேட முற்பணம் வழங்கப்படுவதன் பிரதான நோக்கம் புதுவருடத்தில் அரச ஊழியர்களது பிள்ளைகளுக்குரிய பாடசாலை தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்காகும். ஆனால், அரசாங்கம் அறிவித்துள்ள 4,000 ரூபாவைக் கொண்டு தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக எதனையும் செய்துகொள்ள முடியாது என்பது எல்லோருக்கும் தெரியும். அதிலும் அப்பியாசக் கொப்பிகள் உட்பட பாடசாலை உபகரணங்களின் விலைகள் பன்மடங்காக அதிகரித்துள்ள சூழ்நிலையில் இத்தொகையைக்கொண்டு ஒரு பிள்ளையின் தேவையைக் கூட முழுமையாக நிறைவேற்றிக் கொள்ள முடியாத இக்கட்டான சூழ்நிலையில் அரச ஊழியர்கள் உள்ளனர் .

எனவே, இத்தொகையை ஆகக்குறைந்தது 10,000 ரூபா வரை அதிகரிப்பதன் மூலமே தமது பிள்ளைகளின் தேவைகளை அரச சேவை ஊழியர்கள் நிறைவேற்றிக்கொள்ள முடியும் என்பதை குறித்த அமைச்சுகளின் செயலாளர்களுக்கு சுட்டிக்காட்டியுள்ளோம் என்றும் அவர் தெரிவித்தார்.

கிழக்கு
செய்திகள்
easthamilan@gmail.com

## போடியார் புலம்பல்!



***நாட்டின் பொருளாதாரத்தை கஞ்சாவால் நிமித்தலாம் எண்டு அந்த பொடிச்சி எம்.பி. டயனா கமகே சொல்லியிருக்காவு எலுவா..? இந்த பொம்புளைக்கு எப்பவும் கஞ்சாவுல ஒருகண்ணுன்னு நான் நினைக்கிறன். இவக்கிட்ட களவா கஞ்சா சேனை வைச்சிருக்காவு போல அடிக்கடி கஞ்சா, அபின், சாராயம், பாலியல் தொழிலப்பற்றித்தான் பார்லிமென்டில பேசுறாவு.. ஏதோ ஒரு கோதாரி இந்த மனிசிட்ட இருக்கு!***

# தேசிய மட்ட நடனப்போட்டியில் களுதாவளை பாடசாலை சாதனை




(நிந்தவூர் நிருபர்)

அநுராதபுரத்தில் கடந்த வாரம் நடைபெற்ற தேசிய மட்ட நடனப் போட்டி நிகழ்வுகள் மூன்றில் பங்குபற்றி மூன்றிலும் முதலாம் இடத்தைப்பெற்று மட்டக்களப்பு மாவட்டம், பட்டிருப்பு கல்வி வலயத்திற்குட்பட்ட களுதாவளை மகா வித்தியாலயம் தேசிய பாடசாலை மாணவர்கள் வரலாற்றுச் சாதனை படைத்துள்ளனர்.

மாணவர்களை பயிற்றுவித்த நடன ஆசிரியர்களான திருமதி மதி தேவகுமார், திருமதி சுஜீவா விக்னேஸ்வரனுக்கும் இதற்கு உறுதுணையாக இருந்த பாடசாலை சமூகத்திற்கும், பாடசாலை அதிபர், ஆசிரியர், மாணவர்கள், கல்விசாரா உத்தியோகஸ்தர்கள், ஊழியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சபை, பழைய மாணவர் சங்கப் பிரதிநிதிகள் மற்றும் கல்வி சமூகம் வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துள்ளனர்.

# உமர் ரலி புராணம் நூல் வெளியீடு

(பொலிவேரியன் நிருபர்)



ஈழம் தந்த தீந்தமிழ்ப் புலவரும், முத்தமிழ் அறிஞரும், சூஃபி ஞானியுமாகிய அல்-ஆரிஃபு பில்லாஹ் இமாம் ஜே.எஸ்.கே.ஏ.ஏ.எச். மௌலானா எழுதிய "உமர் ரலி புராணம்" எனும் நூலின் வெளியீட்டு விழா எதிர்வரும் 5ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு சென்னை, எழும்பூர், இலக்கம் 2ஏ, பொன்னியம்மன் கோயில் வீதியிலுள்ள ரமதா ஹோட்டலில் இடம்பெறும்.

இஸ்லாமியத் தமிழ் இலக்கியச் சோலையில் சீறாப்புராண மரபில் மலர்ந்திருக்கிறது உமர் ரலி புராணம். காப்பிய இலக்கணம் காவிய அலங்காரங்களுடன் செந்தமிழ் நடையில் 21ஆம் நூற்றாண்டில் எழுந்த இவ்வரிய புராணத்திற்கு சென்னையில் வெளியீட்டு விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நபிகள் நாயகத்தின் அருமைத் தோழரும் இஸ்லாமிய பேரரசின் இரண்டாவது கலீஃபாவுமாகிய உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் வாழ்க்கை வரலாற்றை மூன்று காண்டங்களாக வகுத்து அதன் முதலாவது உதய காண்டம் தற்போது வெளிவந்துள்ளது. 21 படலங்களையும் 682 செய்யுள்களையும் அதற்கான கொண்டுகூட்டு, பொருள், குறிப்பு என முழுமையான விளக்கத்தை உள்ளடக்கியதாக இவ்வரும்பெரும் காவியம் வெளியிடப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

ஏகத்துவ மெய்ஞ்ஞானத் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில், பெரும் கவிக்கோ, கலைமாமணி, முனைவர் வ.மு.சேதுராமன் MA.Ph.D. தலைமையில் நடைபெறும் இவ்விழாவிற்கு இந்தியா யூனியன் முஸ்லிம் லீக் தேசியத் தலைவர் முனீருல் மில்லத் பேராசிரியர் காதர் முஹியத்தீன், சிறுபான்மை நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் கே.எஸ்.மஸ்தான், தமிழ்நாடு படத்திட்ட கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி, முனைவர் அஃப்ளளுல் உலமா ஷெய்கு அப்துல்லாஹ் ஜமாலி MA,PhD, தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத் தலைவர் பீட்டர் அல்போன்ஸ் உட்பட தமிழ் அறிஞர்கள், மார்க்க அறிஞர்கள், சமுதாயத் தலைவர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் பலரும் இவ்விழாவில் சிறப்புரையாற்றவுள்ளனர்.

இந்நிகழ்வை www.youtube.com/emsmedia என்ற யூடியூப் தளம் மூலம் அனைவரும் நேரடியாகப் பார்வையிடலாம்.